அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

- Page - No - 1 -

மலர்: 16 இதழ்: 1	குரோதி ஞூ சித்திரை மீ ஏப்ரல்—மே மீ 1964	வருட சந்தா ரு. 3-00.

ACC. NO. 9886.

மதுரையில் கால்மாறி ஆடிய கருணையாளர்

சித்திர விளக்கம் 25. பக்கம்: 5.

உள்பொருள்

பக்கம்

1. வள்ளியும், சபரியும் (திருப்புகழ்மணி) ... 1
2. கால்மாறி ஆடியது (கி. வா. ஜகந்நாதன்) ... 5
3. 'அகரமுத லெனவுரைசெய்'
திருபபுகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 8
4. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர்
சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 16
5. அருணகிரிநாத சுவாமிகள் புராணம்
(தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A.) 22
6. இணையும் பெருந்திரு (ரஸபதி) ... 27
7. எப்பொருள் (கி. வா. ஜ.) ... 35
8. திருபபுகழ் (புலவர் விதவான் ஐ. நடேசன்) ... 37
9. தமக்கழிவு தாமே தேடுவர் (அன்பன்) ... 41
10. REFLECTION ON THE DISASTER
OF APRIL 1964 (*Thiruppugal Mani*) 46

Grams: MURSOKS. Phone: 51388

" பொலியும் அற்புதப் பெருவாழ்வும்
புகழ் பலத்தினைத் தரவேணும் "

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் 'சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ஞு சித்திரை மீ ஏப்ரல்—மே 1964	இதழ் 1

வள்ளியும், சபரியும்

(திருப்புகழ்மணி)

சூரியன் எப்பொழுதும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறான். பூமியில் அவன் ஒளி படாதபொழுது பூமியில் இருளாயிருக்கிறது. அதுபோல பகவான் எப்பொழுதும், எங்கும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறான். அவனை மறந்த பொழுது நம்முள்ளத்தில் இருள் அல்லது மறைவுண்டாகிறது.

பகவானுடைய நாமத்தை நம்பிக்கையுடன் சொன்னால் அவனுடைய ஒளி நமக்குள் புகுந்துவிடும். நாமம் வேறல்ல; நாதன் வேறல்ல. நாமத்தைச் சொல்லி அழைத்தால் நாதன் ஏனென்று கேட்பான். அவன் உலக முழுதும் ஒளியாய், பிரம்ம ஜோதிப் பிழம்பாய் நிறைந்திருக்கிறான். ஜாலராவைச்

செம்மை உளத்தில் சிவமிருக்கும்; சீர்கெட்ட
வெம்மை மனத்திற் குரோதம் விளைவதுவே.

சேர்த்துத் தட்டினுல் ஒலியுண்டாகிறது. அதைப்போல், நம் மனத்தை நாமத்துடன் சேர்த்து அழைத்தால் கருணையே வடிவான அவன் ஓடி வருவான். ஆனுல் நம்மனத்தை வெளியில் அலையவிட்டுக் கொண்டு, நாமத்தைமட்டும் வாயால் சொன்னுல் அவனுக்குக் கேட்காது.

நம்மைக் காலம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறது. பஜனையால் நாம் காலத்தை அளந்து விடலாம். தாளத்தால் அதைத் தள்ளி விடலாம். காதுக்கு இன்பம் தருவது சுருதி. சுருதி சேர்ந்தால் இன்பம். சேராமல் வேறுபடுவது துன்பம். நம்முடைய மனம் ஒன்றுபடுமிடந்தான் சத்சங்கம். அதாவது ஏகத்வ மாகிய யுனைடெட் ஸ்டேட்.

இதயத்தி லுள்ளவன் கடவுள் என்று உணர்ந்து விட்டால், அங்கு ஆண்டவன் பேசுவது கேட்கும். நான் என்பது ஆண்டவனுக்குள் அடங்கி ஒடுங்கிவிடும்.

ஒரு பெண்மணி தன் கணவனையும் சொத்துக் களுடன் மூட்டை கட்டிக் கொண்டாளாம். ஏனெ னில் உலகத்திலுள்ள ஜீவராசிகள் வேறு தான் வேறு என்ற எண்ண மிருந்ததால் அப்படிச் செய் தாள். எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் ஆண்டவ னிருக்கிறுன்; அந்த ஆண்டவன் நமக்குள்ளு மிருக்கி றுன் என்பதை யறிந்தால் வேற்றுமை நீங்கிவிடும். "அந்தர்பஹிஃச தத்ஸர்வர் வியாப்ய நாராயண ஸ்தி

உத்தமச் சத்துள்ள உண்டிகொளும் உத்தமர்கள்,
சுத்தர்களே ஆகிச் சுகம்பெறுதல் காணீரோ ?

தக:" அதாவது உள்ளும் புறமும் நிறைந்திருப்பவன் நாராயணனே என்பது உபநிஷத்.

பகவானுக்கு எல்லா ஜீவராசிகளும் சமம்தான். ஆனாலும "பஜனை செய்பவரிடம் தனிப்பட்ட அன்புடையவனாயிருக்கிறேன்" என்று கீதையில் கூறியுள்ளார் கிருஷ்ணன். பஜனை செய்பவரிடம் பகவான் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால், அவனுடைய சுகதுக்கங்களெல்லாம் பகவானுடையதாய் விடுகிறது.

இச்சை கிரியை இரண்டும் ஞானத்தில் ஒன்றி நிற்கின்றன. இம்மூன்று சக்திகளையும் உடையவன் முருகன். ஆதலால் இம்மூன்று சக்திகளையும் பிரிக்க முடியாது.

உலகெலாம் தெய்வத்தின் வியாபகமே என்றறிவதுதான் பிரம்ம ஞானம். அந்த பிரம்ம ஞானத்தைத் தனக்குத் தரவேண்டுமென்று வேண்டுகிறார் அருணகிரியார்.

"வேண்டாமை யொன்றை யடைந்துள
மீண்டாறி நின் சரணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை—யுடை
யேனாய்

வேந்தா கடம்பு புனைந்தருள்
சேந்தா சரண் சரணென்பது
வீண்போம தொன்றல என்பதை
—புணராதோ"

என்ற பாட்டில் இதை யுணரலாம்.

தண்ணீர் அருந்தித் தணிகின்ற தாகம்போல்,
உண்ணீர்மை கொண்டோர், உயரமைதி எய்துவரே.

பகவான் பக்தர்களுக்கு சரணம் என்ற உயர்ந்த ஆயுதத்தைக் கொடுத்திருக்கிறார். சரணம் என்று சொல்லி அவன் திருவடிகளில் விழுந்து விட்டால் அவன் தாங்கமாட்டான். பாவங்களை யெல்லாம் போக்கித் தன்னையே தந்துவிடுவான். "ராகவா சரணம்" என்று கதறிய விபீஷணனை விரோதியின் தம்பியென்று பார்க்காமல் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டதுடன் இலங்காபுரி ராஜ்யத்தையும் முடிசூட்டி விட்டான். சரணம் என்ற வள்ளியைத் தேடிக் கொண்டு ஓடினான். அவள் பாதங்களில் பணிந்து நான் செய்ய வேண்டிய பணியாது? என்று கேட்டானாம். இக்கருத்தை,

" பணியாவென வள்ளிபதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே "

என்ற அனுபூதியடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

அவதார தத்துவமே வணங்குதலை யுடையது. இராமன் யாரைக் கண்டாலும் வணங்குவானாம். இந்த உண்மையைச் சூர்ப்பனகை,

"வந்தனை முனித்தலைவர் பாலுடையர், வானத்
திந்துவின் முகத்தர், எறி நீரிலெழு நாளக்
கந்த மலரைப் பொருவு கண்ணர், கழல்கையர்,
அந்தமில் தவத்தொழிலர், ஆரவரை யொப்பார்?"

என்று இராவணனிடம் தெரிவிக்கிறாள்.

(தொடரும்.)

மன்றின்சேய்ச்சோலை மருவல்போல், தக்கதலா
எண்ணங்கொள் மக்கள், இதயநோய் கொள்பவரே.

சித்திர விளக்கம் 25

கால்மாறி ஆடியது

[கி. வா. ஜகந்நாதன்]

விக்கிரம பாண்டியன் தன் மகனுகிய இராச சேகரனுக்கு முடி சூட்டிப் பிறகு சிவபெருமான் திருவடித் தாமரையை அடைந்தான். இராசசேகர பாண்டியன் அறநெறி பிறழாமல் நாட்டை ஆண்டு வந்தான். பலகலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும் என்ற விருப்பம் அவனுக்கு உண்டாயிற்று. ஒவ்வொரு கலையாகக் கற்ருன். ஆடல் கலையைக் கற்பதற்கு அவன் மனம் ஒருப்படவில்லை. "இறைவனும் நடனம் புரிவது, நாமும் நடனமாடுவதா?" என்று எண்ணி அதைத் தவிர ஏனைய அறுபத்து மூன்று கலைகளையும் கற்று அவற்றிற் சிறந்து நின்றுன அரசன்.

அக்காலத்தில் சோழ நாட்டை கரிகாற் பெருவளத்தான் ஆண்டு வந்தான. அவன் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவனுக விளங்கினுன். ஒருநாள் சோழனுடைய அவைக் களப் புலவன் ஒருவன மதுரைக்கு வந்து பாண்டிய மன்னனைக் கண்டான். அரசனேடு பேசிக்கொண்டிருந்தபோது, "எங்கள் சோழ மன்னன் குறைவு ஏதும் இன்றி அறுபத்து நான்கு கலைகளும் பயின்றிருக்கிருன். உனக்கு அந்த நிறைவு இல்லை. ஒன்று குறையக் கற்றிருக்கிருய்" என்ருன். அதனைக் கேட்ட பாண்டியனுக்கு மான உணர்ச்சி விஞ்சியது. 'அயல் மன்னன் தெரிந்து கொண்ட ஒரு கலையை நாம் அறியவில்லையே! அந்தக் குறையைத்தானே இந்தப் புலவன் எடுத்துக் காட்டினுன்?' என்று எண்ணினுன். அந்தக் குறையைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. 'எம்பெருமான் புரியும் நடனக் கலையை நாமும் தெரிந்து பயிலக் கூடாது என்றல்லவோ விட்டிருந்தோம்? இப்போது அதைக் கற்றுக் கொள்ள வேண்டிய

துஞ்சும் வினையினுர், தொந்தி பெருகலுற
விஞ்சியுண்டு, நாள்தோறும் வேதனைகள் எய்துனரே.

அவசியம் வந்து விட்டதே! அப்போதுதானே நம் மானம் தங்கும்? இதுதான் விதிபோலும்!' என்று எண்ணி வருந்தியவன் பரத நாட்டியக் கலையைக் கற்றுக் கொள்ள முனைந்தான்.

'செய்வன திருந்தச் செய்' என்றபடி அந்தக் கலையைத் தக்கவர்களிடம் நன்ருகப் பயின்ருன் பாண்டியன். பல வகைக் கூத்துக்களையும், அவற்றின் இலக்கணங்களையும் ஆடியும் கற்றும் தெளிந்தான். இவ்வாறு அவன் நடனக் கலையைப் பயின்ற போது அவன் உடம்பெல்லாம் நோவு கண்டது. அப்போது அவனுக்கு மதுரைத் திருக்கோயிலில் உள்ள வெள்ளியம்பலத்தில் ஆடும் இறைவனுடைய நினைவு எழுந்தது. 'சிலகாலம் ஆடிய எனக்கே இந்த நோவு உண்டாயிற் றென்ருல் பலகாலம் ஆடும் எம்பெருமானுக்கு எத்தனை நோவு உண்டாகி யிருக்கும்! ஒற்றைக் காலிலே நின்று மாருமல் ஆடிக் கொண்டிருக்கிருனே! இதுகாறும் நான் இதனை உணரவில்லை. இப்போது இதைக் கற்றுக் கொண்ட பிறகே உண்மையை உணர்கிறேன். இறைவன் நோவு அறிந்தும் நாம் சும்மா இருக்கலாமா? இதை மாற்ற ஏதேனும் செய்ய வேண்டும்' என்ற சிந்தனை அவனுக்கு உண்டாயிற்று. 'இந்த நடனத்தை நிறுத்தி ஓய்வுபெற வேண்டும்' என்று எப்படி நாம் தடுப்பது? தடுக்காமல் நின்ருலோ 'இறைவன் திருவடி வருந்துமே' என்று அவன் மறுகினுன்.

பிறகு ஒருவாறு துணிவு பூண்டான். சிவராத்திரியன்று, திருவாலவாய்ப் பெருமான் திருக்கோயில் சென்று நான்கு யாமங்களிலும் விதிப்படியே பூசை செய்தான். பிறகு வெள்ளி யம்பலத்துக்கு வந்து பூசித்து வணங்கி இறைவனுடைய ஆடலைக் கண்டு மகிழ்ந்து, பின்பு கண்ணீர் வார நின்று ஒரு வேண்டுகோளை வெளியிடலானுன்; "எம்பெருமானே,

---

நொறுங்கத் தின்பரர்க்கு, நூறுவய தென்பர்;
நறுங்குணத்தர், அஃதேபோல் நற்செயலால் வாழ்பவரே.

பல காலமாக நீ உன் வலத்தாளை ஊன்றி ஆடுகின்றாயே! இனி, அதை மாற்றி இடத்தாளை ஊன்றி வலத்தாளை எடுத்து மாறி ஆட வேண்டும். உன் நோவை எண்ணி எனக்கு உண்டான வருத்தம் அப்போதுதான் போகும். அவ்வாறு செய்யாவிட்டால் உன் நோவை அறிந்தும் நான் உடம்போடு வாழ மாட்டேன். இந்த வாளின்மேல் விழுந்து உயிர் விடுவேன்'' என்று சொல்லி முன்னே வாளை நட்டான். இறைவன் முன் நின்றபடியே நின்றான்; பாண்டியன் நெஞ்சு நெகிழ அந்த வாளின்மேல் பாய்ந்து உயிர்விடத் துணிந்தான். அதற்குள் பக்தர் துயரம் தீர்க்கும் பரம கருணா நிதியாகிய பெருமான் காலை மாற்றி ஆடத் தொடங்கினான்.

அதைக் கண்டவுடன் பாண்டியன் ஆனந்தக் கடலில் வீழ்ந்தான். உடம்பெலாம் புளகம் போர்க்க இறைவன் மாறி யாடிய அந்த நடனத்தைக் கண்டு கண்டு மனமுருகித் துதிக்க லானான். ''எல்லோருக்கும் பெரிய பெருமானே சரணம். யாவாக்கும் காணொணாத சிறிய அளவும் கொண்டவனே சரணம். அரியாய் சரணம். எளியாய் சரணம். எளியேனுக்காக கால் மாறி நடனம் புரிபவனே சரணம்'' என்று பலபடியாக ஏத்தினான்.

''பெரியாய் சரணம் சிறியாய் சரணம்
கரியா கியஅங் கணனே சரணம்
அரியாய் எளியாய் அடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்!''

''நதிசூ டியசெஞ் சடையாய் சரணம்
மதியாய் மதியா தவர்தம் மதியில்
பதியாய் பதினெண் கணமும் பரவும்
துதியாய் சரணம் சுடரே சரணம்!''

இவ்வாறு துதிசெய்த பிறகு, ''இந்தக் கோலத்தோடே கால்மாறி நடனமாடும் காட்சியை யாவரும் காண என்றும் நின்றருள வேண்டும்'' என்று வணங்கினான் பாண்டியன்.

அன்றுமுதல் வெள்ளியம்பலத்தில் எம்பெருமான் கால் மாறி ஆடும் நடனக் கோலத்தில் விளங்கி யருளுகிறான்.

(பொது)

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை எப்பொருளு மாய-
அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினின்மலமு நெஞ்சங்கு ணத்ரயமு மற்றதொரு
நிகழும்வடி வினைமுடிவி லொன்றென்றி ருப்பதனை [காலம்
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ ரித்தபெரு மானும்-
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது ணர்த்தியருள் [வாயே;
தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத தத்ததகு தீதோ-
தனதனன தனதினன தந்தந்த னத்ததன
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு
டரரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையுமு டுக்கையுமி யாவும்;
மொகுமொகென அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலைகைகர ணமிடவுல கெங்கும்ப ரக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக ளத்திலொரு கோடி-
முதுகழுகு கொடிகருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச ளித்த பெருமாளே.

பசியிலாக் காலத்தும், பல்வகைய தின்று,
வசிக்கும் வயிறுளைந்து வாடுவது ஆகாதே.

(பதவுரை) [தகுதகுகு...........மொகு மொகென அதிர.]

தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு—டிகுடிகுகு டிகு டிகுகு டிண்டிண்டி குக்குடிகு — தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத—தத்ததகு தீதோ,

தனதனன தனதனன தந்தந்த னத்ததன—டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு—தாரார ரிரிரிரிரி—;

என்று என்று இடக்கையும் — என்று இடையருது இடக்கைப் பறையும்; உடுக்கையும் யாவும் — உடுக்கை முதலிய அனைத்துமான வாத்தியங்களும் ;

மொகு மொகு என அதிர—(ஒன்று சேர்ந்து) மொகு மொகு என்று, (எடுப்பான) அதிர்வுப் பேரொலி எழுப்ப;

(முதிர் அண்டம்.................பெருமானே!)

முதிர் அண்டம் பிளக்க — பேரண்டங்கள் (அந்த அதிர்ச்சியால்) பிளவுபட;

நிமிர் அலகைகள் கரணம் இட—நெடும் பேய்கள் (களிப் படைந்து குட்டிக்) கரணம் இட;

உலகு எங்கும் பிரமிக்க—மாநிலம் எங்கும் இருப்பவர் மருண்டு திகைக்க;

நடம் முடுகு பயிரவர் பவுரி கொண்டு இன்புற — பயங்கர நடம்புரி பயிரவர்கள், மண்டலித்துக் கூத்தாடி மகிழ:

படு களத்தில்—(மதியற்ற அவுணர்கள்) மாண்ட நிலத்தில்; ஒரு கோடி முது கழுகு—ஒரு கோடி கிழக் கழுகுகள்;

கொடி—காக்கைகள்; கருடன்—பருந்து முதலிய பறவைகள்: அங்கம் பொர—(குமைந்த உடல்களின்) உறுப்புக்களைக் கொத்தித் தின்ன;

குருதி நதி பெருக—உதிர ஆறு பெருகி ஓட:

வெகு முக கவந்தங்கள் நிர்த்தம் இட—அவுணர்களின் பலதலைகள் அறுந்த முண்டங்கள் படபடத்துக் கூத்தாட;

ஆவின்பால் ஆயிடினும், காலத் தருந்துபவர்,
நோவின்பால் ஆகி, நுடங்காங்கள் நிச்சயமே.

முரசு அதிர — (பெரிய) முரச வாத்தியங்கள் (அதி பயங்கர) அதிர்ச்சி விளைவிக்க ;

நிசிசரரை வென்று — (பாவ இருளிற் பயிலும் வீணுன) அவுணர்களை வென்று ;

இந்திரற்கு அரசு அளித்த பெருமாளே—(அமர லோக) இந்திரனுக்கு, ஆட்சியை உதவிய தெளிந்த பெருமிதத் தெய்வமே !

(அகரம் முதல் என.................தனிப்பொருளை.)

அகரம் முதல் என உரைசெய் ஐம்பந்தொர் அக்ஷரமும்— அகரம் முதல்எழுத்தாக அறிவிக்கப் பெறும் (இனிய) ஐம்பத்தொரு எழுததுக்களையும் ;

[ஐ பத்து என்பது, மெலித்தல் விகாரத்தால் ஐம்பந்து என்று ஆயது. ஒர் எனபது, ஓசைநயம் கருதி ஓர என நின்றது.]

அகில கலைகளும் — (அந்த எழுத்துககளைத் தம்முள் கொண்ட) அழிவிலாத கலைகளையும் ;

வெகுவிதம் கொண்ட தத்துவமும் — (அக்கலைகளில் உள்ள) பலவிதமான (புனித) உண்மைப பொருள்களையும் ;

அபரிமித சுருதியும் அடங்கும் தனிப்பொருளை — (அத்தத்துவஙகள் அனைத்தும் தம்முள் அமைந்துள) அளவற்ற மாபெரும் மறைகளையும் (ஒரு சேரக்) கொண்டுள்ள ஏகமான மெய்பொருளை, (ஐயா ! விளங்கும்படிக்கு இனிது உணர்த்தியருள் !)

(எப் பொருளும் ஆய.................மந்த்ரந்தனை.)

எப்பொருளும் ஆய அறிவை அறிபவர் அறியும் இன்பந் தனை—(மேற் சொன்ன வித்தகப்) பொருள்கள் அனைத்துமாகி விளங்கும் அறிவின் சொரூபத்தை அறிபவர்களான ஞானிகள அனுபவிக்கும் இன்ப அனுபவததை, (அமலா ! அறியுமாறு அளியேற்கு அறிவித்தருள் !)

உப்புடன் நெல்லை உறவாக்கி உண்பவர்போல்,
தப்பாம் செயல்கள், தழுவுவதும் ஆகாதே.

துரிய முடிவை—(நான்காவது நிலை எனப்பெறும்) துரிய அனுபவ இறுதியின் விளைவை, (அண்ணலே! விளங்குமாறு எற்கு விளக்கியருள்!)

அடி நடு முடிவில் துங்கந்தனை — (எந்த விளைவிலும்) முதல் இடை இறுதியில் தெய்வ உயர்வாகத் திகழ் நிலையை, (உணருமாறு பெரும! உதவியருள!);

சிறிய அணுவின் அணுவை—(ஒவ்வொன்றிலும் உள்ள) நுண்ணிய அணுவிற்குள் பரமாணுவாய் இருக்கும் அதிநுட்ப அனுபவத்தை, (அததா! அடியனேற்கு உணர்ததி அருள்!);

மலமும் நெஞ்சும் குணத்ரயமும் அற்றது ஒரு காலம் நிகழும் வடிவினை—மும்மலமும், மனமும், மூன்று குணங்களும் செயல்படுதலற்ற சமயத்தில் பிரகாசிக்கும் சொருபத்தை, (பிரபோ! அடியேம் உணருமாறு உணர்த்தி அருள்!);

முடிவில் ஒன்று என்று இருப்பதனை — (இவ்வுலகம் யாவும் மறைந்த) இறுதியில், ஏகம் என்று இருந்த உமது இருப்பை, (அடியேம் உணர எளிதாக உணர்த்தியருள்!);

நிறைவு குறைவு ஒழிவு அற நிறைந்து எங்கும் நிற்பதனை —நிறைவும் குறைவும் நீக்கமும் இனறி, வியாபகமாகி எவ்விடத்தும் விளஙகும் விளக்கததை, (அத்தா! அடியேற்குத் தெரியுமாறு இனிது தெரிவித்தருள்!)

நிகர் பகர அரியதை—(எதனுடனும்) ஒப்பிட்டு உரைக்க ஒண்ணாத (அந்த) உயர் நிலையை, (அரசே! உள்ளத்திற்கு விளங்குமாறு சிறிது உணர்த்தியருள்!)

விசும்பின் புரத்ரயம் எரித்த பெருமானும்—விண்ணில் இயங்கி விளங்கிய புரஙகளை(ச் சிரித்து) எரித்த சிவபிரானும்;

நிருப — (சிவசாம்ராஜ்ய) சக்கரவர்த்தியே!

குருபர — மேதகு ஞானமெய்க்குருவே!

பாக்குதனை மென்றுதின்று, பண்புமிகு மென்மையுள
நாக்குத் தடிப்பாரை, நாம்திருத்தல் ஆவதுவோ?

குமர என்று என்று பக்திகொடு பரவ — பரம இளம் பரிபூரணா! என்று இடையறுது துதித்து, அன்பு கொண்டு ஆராதித்த அமயம்;

அருளிய மௌன மந்த்ரந்தனை—(அவர்க்கு) அறிவித்த மௌன உபதேச மந்திரத்தை;

பழைய நினது வழி அடிமையும் விளங்கும்படிக்கு — ஆதி முதல் உமது வழி அடிமையான (வினய) எளியேற்கும் விளங்கும்படி;

இனிது உணர்த்தி அருள்வாயே — (உள்ளம்) உணரு மாறு இனிது உணர்த்தி அருளும், (எ - று).

விரிவுரை

மூன்று உலகத்திலும் அவுணர்கள் முன்னேறினர். பண்ணவர் உலகைப் பறிமுதல் செய்தனர். அழகுடையவர் களை அடிமைப் படுத்தினர். குடித்தனர். குதித்தனர். அனைவரையும் எப்படி எப்படியோ அடக்கி ஒடுக்கினர். எங்கும் குமுறல்கள் எழுந்தன. அளவிறந்த காலமாக இந்த நிலை.

இது கண்டு, தரித்திலர் தேவதேவர். உடனே வீர முருக னாக வெளிப்பட்டார். கொடிய அவுணர்கள் கொக்கரித்தனர். போர்க்களம் கனன்று புகைந்தது. நாத நம்பன போர்ப் பறைகள், எங்கும் பேரொலி எழுப்பின. அவைகளின் ஒலியி லும், இனிய அறிவுரைகள் இருப்பது இயற்கை. அவைகளை, வெறும தாளக் குறிப்பு என்று தள்ளி விடுவது ஆகாது. ஆக்கப பாட்டிற்கு உரியபடி, தோன்றும் அளவு பொருள் கொள்வம்.

தகு தகு கு

தகு - இயல்கின்ற; தகு - உரிமை; கு - குற்றமே.

காலத்தில் உண்டு, கணக்கறிந்து தூங்கி,
ஞாலத்தில் தர்ம வழிநடத்தல் நல்லறமே.

(எதுவும் எம்மதே! எவரும் எம் அடிமைகளே! என்று, மோதி உரிமை கொண்டாடுவது முதல் பிழை.) இப்படி எழுந்தது முதல் ஒலி.

தகு தகு கு.

தகு - தகுதி (யென்று கொண்ட); தகு - (உங்கள்) ஒழுக்கம்; கு -சிறுமைகாண்;

(இப்படி ஏதமான தீய ஒழுக்கத்தை ஏற்றீர்கள்!) இது அடுத்த ஒலி.

தந் தந்த குத்த குகு.

தம் தந்த - தாம் தாம் செய்த தவத்தின்; குத்த - பாது காப்பு; குகு - (இப்போது) இருண்டு போயது.

(திரியும் நெய்யும் உள்ளவரை தீபம். அதன்பின் அது அணைந்துவிடும்; அதுபோல் புண்ணியம் உள்ள அளவு வாழ்வு! அதன்பின் அது பொய்த்துவிடும்.) இது மூன்றாவது ஒலி.

டி குடி குகு

டி - (பாவத்)தீ; குடி - குடி இருக்கிறது; குகு - நரம்புகளில்; (இதுவரை செய்த பாவத் தீ, உங்கள் நாடி நரம்புகளில் பற்றியுள.) இது நான்காவது ஒலி.

டிகு டிகு கு.

டிகு டிகு - திகு திகு என்று; கு - (இன்று மக்கி அவைகள்) மண்ணாயின; இது ஐந்தாவது ஒலி.

டிண்டிண்டி குக் குடிகு தகுத!

டிண்டிண்டி—, என்னும் உங்கள் சாப்பறைகளின் ஒலி; கு - நிலவுலகில்; குடிகு - (நெருங்கி) எங்கு நிறைந்தன; இது ஆறாவது ஒலி. தகுத - (இது) தகுதியே! இது ஏழாவது ஒலி.

கெண கெண செகுத!

கெண கெண - (உங்கள்) சமூகம் முழுதும்;

பல்லசை போடப் பசியாறும்; தெய்வப்பேர்ச்
சொல்லசையும் நாவால், சுகம்பிறத்தல் காணீரோ.

செகுத - (கால்வேறு தலைவேறாகச்) சேதிக்கப் பெற்றன. இது எட்டாவது ஒலி.

தந் தந் தரித்த குத நத்த தகுதீதோ.

தம் தம் தரித்த - தம் தம் தரமான (பெரிய) வாய்களை ; குத - (இப்போது) குதப்புகிறீர்கள்.

தத்த - அபாய கால இவ் விளைவுகள்.

தகு - (யாவரையும் தளரச் செய்த உங்கள் செயலிற்குத்) தகுதிதான் ;

தீதோ - (இத்தண்டனை) தீமையே அல்ல ; இது ஒன்ப தாவது ஒலி.

தன தன னத னதன.

தன - பொன்னும் ; தன - போகானுபவமுமே ;

நத - (இதுவரை) அடைந்திருந்தீர்கள் !

நதன - (அவைகள் இன்று விண்ணில் உள்ள) கிரக தூரம் (ஓடி ஒளிந்தன ;) இது பத்தாவது ஒலி.

ன, தந்தந் தனத்த,தன.

ந தந்தம் தனத்த - சிறந்த (யானைத்) தந்தம் போன்ற (கோதையர்) குய உறவும் ;

தன - (கவர்ந்த) செல்வ கனவாழ்வும் ;

டுடுடுடு டுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு—, எனும் பளிங்குடு வாழ்வாகிப் பல்லிளித்தன; இது பதினோராவது ஒலி.

தரரரர ரிரிரிரிரி.

தர - (உங்கள்) தரம் யாவும் ;

ரரரர - என்று சுழலும் இந்நிலை ;

ரிரிரிரிரி - (ஐந்திரி எனும்) துர்ப்பாக்கியத் தொய்வுதான்; இது பன்னிரண்டாவது ஒலி.

பாலே உடற்குப் பலமளிக்கும், ஞானமெய்ப்
பாலே உயிர்க்குப் பலனுறுத்தல் பாரீரோ?

இப்படி இடையறுது கூறும் பொருள் ஒலிபோல் உள்ள பறை ஒலிகள், ஒருங்கு சேர்ந்து மொகு மொகு என்று அதிர்கின்றன.

மொகு மொகு - ஈரடுக்கு ஒலிக் குறிப்பு என்று சொல்லி விடுவது சுலபம். இந்த இடத்தைச் சற்று ஆராய்வம்.

பறவைகளே! பேய்களே! தூய வேல்இறைவன், தொல்லைதரும் அவுணர் வாழ்வைத் தொலைத்தான். மோசமான அவர்தம் உடல்களை, நீங்கள் மொக்கித் தின்னுங்கள்! உலகில், இயற்கைச் சுகாதாரம் இதனால் எழும் எனும் அறிவிப்பாகவும் இருக்கலாம் அல்லவா!

இடது கரத்தால் அடிக்கும் பறை இடக்கைப் பறை; வலது கையால் அடிக்கும் பறை உடுக்கைப் பறை; யுத்த காலத்தில் முழக்கப் பெறும் பிற வாத்தியங்களும் உள; அவைகள் யாவும் சேர்ந்தே இப்படி ஏக காலத்தில் ஒலியை எழுப்பின.

அச்சம் விளைவிக்கும் சமர்க்களத்தில், களங்கமான உணவு கிடைத்த களிப்பால், குட்டிக் கரணம் போட்டுப் பேய்கள் குதிக்கின்றன.

பல உலகங்களைக் காவல் செய்யும் பயிரவர்கள், வலம் இடம் சுழன்று அதிபயங்கரமாக ஆடுகின்றனர். கழுகுகளும் பருந்துகளும் காக்கைகளும், எங்கும் மொய்த்து, தீய பிணங்களைக் கொத்தித் தின்கின்றன. உதிர வெள்ளம் எங்கும் ஓடுகின்றது. அளவிலா முகங்கொண்ட அவுணர் தலைகள், அறுந்து விழுந்து உருளுகின்றன. தலையறுந்த முண்டங்கள், திடீரென்று துள்ளிக் குதித்துத் துவளுகின்றன. அதிகனமாக முரசு அதிர்கிறது. அடே அப்பா! எவ்வளவு பயங்கரமான போர்!

பழக்கம் பலநாளேல், பால்புளிக்கும் என்னும்
பழமொழிபோல், நாமஜெபம் கைவிடுதல் பாபமரோ.

மயிலேறும் பெருமான் செய்த வீரப் போரை மனம் கொண்டு, தொலகாப்பியரும், அவர்க்குப் பின் வந்தோரும் புறப்பொருள் இலக்கணத்தில் இப் போர்ச செய்திகளைப் புகுத்தியுளர்.

நல்லோரை நலிவித்த கொடியோர், நாசம் ஆயினர். அகதிகளா யிருந்த அமரர் முதலினோர், விசாகன் அருளால் விடுதலை எய்தினர். அசுரர்களால் எரிந்து கரிந்திருந்த புண்ணிய மயமான பொன்னுலகம், செவ்வேள் கட்டளையால், இன்று மின்னிப் பொலிந்து மிளிர்கிறது.

இழுநத ஆட்சியை இந்திரன் எய்தினன். மும்மல கண்டனம், அரிஷாதி என்னும் ஆறு தோஷ கண்டனம் அகம்; அசுர அராஜக ஆட்சியின அழிவு புறம்.

இப்படி யெல்லாம், அகத்தும் புறத்தும் ஞான தர்ம ஆட்சியை நிறுவிய தற்பரா! கேண்மையேன் விண்ணப்பம் கேட்டருளும்! (தொடரும்.)

வாழ்க திருப்புகழ் வளம்.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

'அ'காரபதயே நமோநமஃ

அகார பதயே—அகார முதல்வனுக்கு

நமோநம—போற்றி! போற்றி !!

உகார பதயே நமோநமஃ

உகார பதயே—உகாரத் தலைவனுக்கு

நமோநம—போற்றி! போற்றி !!

மகாரபதயே நமோநமஃ

மகார பதயே—மகாரத் தலைவற்கு

நமோநம—போற்றி ! போற்றி !!

பஞ்சம் அறியாப், பசியறியா ஞானிகளைத்
தஞ்சம் புகுந்தோர், தரமுயர்ந்து வாழ்பவரே.

விளக்கம் :

செவ்வேளின் சீர்த்திகளைப் பலபடப் பாராட்டிவந்த பாம்பு னடிகளார், மேலே காட்டிய மூன்றடிகளில் பிரணவப் பெரு மாளுய் விளங்கும் சிறப்பைப் பேசுகிருர்.

பிரணவம் :

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்றபடி உலகில் கேட்கப்படும் எல்லா வகையான ஒலிகளுக்கும் மூல ஒலி ஒன்று உண்டு. அது ஓங்கார ஒலியே. ஓம் என்னும் இம் மூல ஒலியே பிரணவம் என்ற மந்திர மறையாகும். எல்லா உயிர்களும் உணர்ந்தோ உணராமலோ இவ்வொலியை வெளியிட்டு அதனால் இறைவனை வழிபடுகின்றன. வாயைத் திறந்து குவித்து மூடி விட்டால், இம் மூலமந்திரம் செபித்த தாகிவிடுகிறது. இதனால்தான் இம் மூன்று செயல் செய்யும் உயிர்கள அனைத்தும் பிரணவ செபம் செய்கினறன என்கிறோம். மூச்சு இல்லாமல் உடல் இயங்காது. பிரணவப் பேச்சில்லாமல் உயிர் இயங்காது.

உள்ளும் புறமும் ஓங்கார ஒலி :

உலகையே இயக்குவது ஓம் என்ற ஒலிதான். நம் உட லின் புறத்தே சிறந்த உறுப்பு முகம். அதில் மிகச் சிறந்த உறுப்பு கண். ஆயினும் குழந்தைக்கு முதலில் செயல்படுவது செவி. (1) முகம் தெரியாத பச்சைக் குழந்தைகூட தாயின் தாலாட்டு கேட்டு அழுகையை நிறுத்தி ஆனந்த நித்திரை கொள்கிறது. அப்போது பாடும் பாட்டில் 'தாலோ தாலேலோ' 'ஆராரோ ஆரிவரோ' என்ற ஓங்கார ஒலியே ஆறுதலளிக் கிறது. இதைக் கேட்க அமைந்த காதின் வடிவம்கூட ஓங்கார மாய்த் தோன்றும். உள்ளே இருக்கும் குடல்கள் கூட ஓங்கார அமைப்பை உடையவை. (3) காதைக் கையால் மூடியபோது

கொல்லும் வினைதவிர்க்கக், கோணமதி கூத்தடிக்கும் ;
பொல்லாப் பசிதான், நுரைதின்றால் போகுமதோ ?

உள்ளே இருந்து கேட்கும் ஒலியும் ஓங்காரமே. இவ்வொலி ஒருவருக்கு நன்றாக ஒலிக்காம லிருப்பது, அவருடைய உயிர் பிரிகின்ற தருணங் காட்டுங் குறி என்பர் பெரியோர். (4) அஃறிணை உயிர்களும் பிரணவம் பேசுகின்றன. பிரணவத்தை 'ஓ' என்ற முழு ஒலியால் வெளியிடுவது 'சேவல்.' 'கொக்கறுகோ' என்று கூவுவதைக் கவனியுங்கள். ஆனால் மற்றப் பறவைகளும் பிரணவத்தைப் பகுதி பகுதியாக ஒலிக்கின்றன. 'கா' வென்று காக்கை கூவும்போது பிரணவப பகுதியாக 'அ' ஒலிக்கிறது. 'கூ' என்ற பரவைக் கூச்சலில 'உ'கரம் தொனிக்கும். மாடுகள் பிரணவப் பகுதிகளான 'அ' 'ம்' இரண்டும் கூட்டி 'அம்மா' என்றே குரல் கொடுக்கும். அமெரிக்காவி லிருநதாலும், ஆஸ்திரேலியாவி லானுலும், இந்தியா ஆனுலும், ஐரோப்பா ஆனுலும் மாடுகள் அம்மாவென்றே கத்துவது வழககமாயுள்ளது. எனவே பிரணவம் செபிக்காத பிராணிகள் இல்லை என்னலாம் அல்லவா?

பிரணவம்—பொருள்.

(1) பிரணவம் என்ற சொல் 'நு' துதித்தல் என்ற தாதுவினின்றும் வந்தது. பிறகு 'தோத்திரம்' என்ற பொருளில் 'நவ' என்ற சொல உண்டாயிற்று. "ப்ர" என்ற உபசர்க்கம் கூடி 'ப்ரனவ' மாயிற்று. இதனுல் பிரணவத்தினின்று தோன்றிய எல்லா வாக்கியங்களும் பிரணவாபினன (பிரணவத்தினின்று பிரிக்கப்படாத) தேவதையான பரசிவ தோத்திரங்களேயாம். ஆதலின் பிரணவம் எல்லா மந்திரஙகளின் சாரம் என்பர். (2) "ப்ரணுங் ஸர்வாங் பரமாத்மநி ப்ரணுமயதீதி பரணவ:"

எல்லாப் பிராண விருததிகளையும் பரமாத்மாவினிடத்தில் சேர்ப்பிப்பதால் பிரணவமெனப்படுகிறது எனபது அதர்வண அதர்வசிகை. இவ்வித பிரணவமே எல்லாத் தேவர்கட்கும்

---

* தீயினுல் சுட்டபுண் உள்ளாறும்; தீமைமிகு
வாயினுற் பட்ட வடுஎன்றும் மாறுதே.

எல்லா வேதங்கட்கும் மூலம். எல்லா வாச்சியங்களும் பிரணவ சொரூபமே என்று பொருள்தரும்.

" ஸர்வவேத யோநி:
ஸர்வ வாசயவஸ்து ப்ரணவாத்மகம் "

எனும் வாக்கியம் அதர்வசிகையில் உள்ளது. இக்கருத்தை

" ஓமெனும் பதமதனில் வேதமாதி
உற்பவிக்கும் ஆலம் வித்தி னுதிக்குமாபோல் "

என்று சிவதருமோத்தரமும்,

"ஓங்காரமாம் ஐநதெழுத்தால் புவனத்தை யுண்டுபண்ணிப்
பாஙகா நடத்தும் பொருளே அகண்ட பரசிவமே"

என்று தாயுமானுரும் சாற்றுவது காண்க.

பிரணவ வகை :

இப பிரணவம் சமஷ்டி (ஒன்ருகத் தொகுத்து நிற்பது.) வியஷ்டி (விரிவாகப பிரிந்து நிற்பது.) என இருவகைப்படும். ஓம்' என்று தொகுத்துக் கூறும்போது சமஷ்டி என்றும், 'அ' 'உ' 'ம்' என விரித்துக் கூறும்போது வியஷ்டி எனவும் பெறும். சமஷ்டி சிவபரமாகவும், வியஷ்டி திரிமூர்த்தி பரமா கவும் விளங்கும்.

'அ'காரச் சிறப்பு :

(1) நம் வாயைத் திறந்தால் முயற்சியின்றி வெளிவரும் எழுத்து. (2) எழுத்துக்கள் அனைத்திற்கும் முதலாவது; 'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள்.) (3) தானே இயங்கு வதோடு மற்ற எழுத்துக்கள் இயஙகத் துணையாவது. 'அ' விற்குரிய வகையில வாய் திறக்காவிட்டால் எந்த ஒலியும் வராது. (4) இதன் சிறப்பு நோக்கி அம்மா, அப்பா, அண்ணு முதலிய சொற்கள் பெரியோர்கள் பெயராக வழங்கப்பட்டன போலும். (5) மக்கள் பண்புகளான அன்பு, அருள், அடக்கம்,

---

நமைகொண் டலைவெய்தி நையும் மனத்தை
அமைதியுறச் செய்பவர்கள், இவ்வுலகில் யாரேயோ ?

அறிவு என்ற உடைமைகளும் 'அ' கரத்தில் தோன்றுவது காண்க.

இத்தகைய சிறப்பெல்லாம் நோக்கியே
' அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து '

என்று சாத்திரம் சாற்றியது. 'அ'கரங் சிருட்டி—தோற்றம்—செய்தலின் பிரமனைக் குறிக்கும் என்பர். அதனால் 'அகாரபதி' சிருட்டிசெய்யும் பிரமனையும் குட்டிச் சிறையிட்ட கோமானான முருகனைக் குறித்தது என்க.

'உ'காரச் சிறப்பு :

(1) உதடு குவிந்துள்ளவரையில் தோன்றும் எழுத்து. (2) ஸ்திதி—என்ற காத்தல் செய்யும் எழுத்து. (3) தேவிக்குரிய பீஜ (வித்து) எழுத்து (உமா என்ற பேர். 'உம் எனும் அக்கரத்தால் உமைஎனும் பெயர் பெறும் பராபரை '—என்பது பாம்பனடிகளது திருவாக்கு.) (4) 'உ' என்பது காக்கும் கடவுளான திருமாலைக் குறிக்குமென்பர். ' உகாரபதி ' என்பது, அரியெனவாகி அதிட்டித்து நிற்கும் தலைவரான அயில் வேலனைக் கூறியதாம்.

மகாரச் சிறப்பு :

(1) ம்—என்பது உதடுகள் மூடிய மோன நிலையில் அடங்கும் எழுத்து. (2) இது லய அட்சரம் எனப்படும். (3) சம்மாரத் தலைவரான உருத்திர மூர்த்தியைக் குறிக்கும். ஆகவே 'மகாரபதி' மயிலேறும் மன்னனே என்பதும் பெற்றும்.

மேலே கூறியவற்றி லிருந்து 'அ'கரம் 'உ'கரம் 'ம'கரம் என்பவை ஆக்கல், காத்தல், அழித்தல் செய்யும் அயன், அரி, அரன (ருத்ரர்)களை வாச்சியப் பொருளாக வேதம்

ஆலசியம் செய்தால், அருமையன தூரம்போம்;
காலத்தில், தூய கருமம்செய் என்மனமே !

உபசரிப்பதால், முருகவேள் சதுர்த்தப் பொருளாய் மூவர் தேவாதியர் தம்பிரானுக விளங்குகிறுர் என்பதே புலனுகும்.

அகாரமென்னும் ஸ்தூலனுகிய பிரமதேவனை நாபியிலும், உகாரமென்னும் சூட்சுமனுகிய விஷ்ணுவை இருதயத்திலும், மகாரமென்னும் சூட்சுமதரனுகிய ருத்ரமூர்த்தியைப் புருவ நடுவிலும், ஓங்காரமாகிய சூட்சுமதரனுகிய (துரிய) சிவனைத் துவாத சாந்தத்திலும் தியானிக்க வேண்டும் என்ற பொருளைத் தரும்.

" அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ
உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே
மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே
ஓங்காரம் சர்வேச்வரந் த்வாத சாந்தயே "

(அதர்வண, ந்ருசிம்மதாபநீயோபநிஷத்)

வாக்கியம் ஈண்டு நினைவுகூரத் தகும்.

' அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி—அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி
—அவர்மேலாய்—(திருப்புகழ்.)

' அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்து
அகர உகர மகரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகி '

(விநாயகபுராணம்.)

' படைத்தளித் தழிக்கும் திரிமூர்த்திகள் தம்பிரானே '
' மூவர் தேவாதிகள் தம்பிரானே '

(திருப்புகழ்.)

முத்தொழில் மூர்த்திகள் தலைவனுக்கு வணக்கம்; அகராதி மூன்று மாத்திரைகளுள்ள பிரணவ வாச்சிய குமரப் பெரு

இடுக்கறையில தங்கி இருக்கலாம், சாய்ந்து
படுக்கலாம் என்னில், பலபிணிகள் வந்துறுமே.

மானுக்கு வணக்கம் என்ற பொருள்கள் இம் மூன்று அடிகளி லும் அறிவிக்கப்பட்டன என்க

வியஷ்டிப் பிரணவ மாத்திரைகளான 'அ, உ, ம்' என்பன ரிக், யசுர், சாமம் என்ற மும்மறை வடிவின என்பர். ஏனெனில் ரிக்வேதத்தில் 'அ:கினிமீளே' என்பதில் முதல் எழுத்து 'அ.' யசுர்வேதத்தில் 'யோகிஸ் ஸமுத்ரோ பந்து' என்ற நடு எழுத்து 'உ.' சாமவேதத்தில் 'ஸமாநம் வரம்' என்று முடிவதால் கடைசி எழுத்து 'ம்' எனவாம். இதனுல் 'ஓம்' என்ற பிரணப் பொருளை விவரிப்பனவே வேதங்களாம். இப் பிரணவம் வேதத்தி லடங்குவதால் சிவத்தினிடத்தில் நிலை யுறும் சிவனைச 'சப்தார்தத வாச்சியர்' என்பர். ஆதலின் அறுமுகச் சிவமே பிரணவப் பொருளாந் தலைமை யுடையார்; அவருககு வணக்கம் கூறியது என்று அறிகிறோம்.

" நாலந்த வேதத்தின்—பொருளோனே
நானென்று மார்தட்டும்—பெருமாளே"

" நாலுமறைப் பொருளோனே
நாககிரிப் பெருமாளே " (திருப்புகழ்.)

அருணகிரிநாத சுவாமிகள் புராணம்

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

(560-ம் பக்கத் தொடர்ச்சி.)

நகர வர்ணனையும் சிறப்பும்.

1. இத்துணைப் பெருமை வாய்ந்த நடுநாட்டின் திலக மாய் விளங்குவது திருவண்ணுமலை. திருவாதவூரடிகள் திரு வாய்மலர்ந்த 'திருவெம்பாவை', 'திருவம்மானை' எனப்படும் அருமைப் பதிகங்களைக் கொண்டது அருணைமாநகரம்.

இருந்து, பிறகு படுத்தல்போல், இவ்வுலகில்
திருந்து செயல்பலவும் யோசித்துச் செய்வோமே.

2. திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசும் திருவாய்மலர்ந்த திருப்பதிகங்களைக் கொண்டது அருணைமா நகரம்.

3. திருமாலும் பிரமனும் பிற தேவர்களும் நடுங்க உலகங்களைக் கலக்கித் தீச்செயல் புரிந்த மகிடாசுரனை தேவியின் தோழி ஒருத்தி சங்கரித்த சிறப்பினை யுடையது அருணைமா நகரம்.

4. கல்லாய்ச் சமையும்படி தன் பத்தினி அகலிகைக்குச் சாபமிட்டு, அவள்பால் சென்ற இந்திரன் ஆயிரம் கண் பெறும்படி சபித்த கௌதம முனிவர் தவஞ்செய்த தலம் அருணைமாநகரம்.

5. அத்திரி முனிவரின் புதல்வரான தூர்வாசருடைய சாபத்தினால் குதிரையும் புனுகு பூனையுமான இரண்டு *வித்யாதார்கள் மலை வலம்வந்த புண்ணியத்தினால் தத்தம் சாபம் நீங்கப்பெற்ற தொல்பதி அருணைமாநகரம்.

[*காந்திசாலி, கலாதரன் என்கின்ற இரண்டு வித்யாதரர்கள் தூர்வாச முனிவரின் ஆச்ரமத்திலிருந்த நந்தவனத்தில் புகுந்து ஒருவன் (காந்திசாலி) அங்கிருந்த சிறு புதர்களை மிதித்தான. கலாதரன் அங்கிருந்த மலர்களைப் பறித்தான். இதைக்கண்ட முனிவர் மிக்க கோபங்கொண்டு, " சிவபெருமான் பூசைக்குரிய மலர்களைக் கொண்ட இந்த நந்தவனத்தில் புகுந்த பாவிகாள்! என் கோபத்துக்கு ஆளாயினீர் " என்று கூறி காந்திசாலியைக் குதிரையாகப் போகக்கடவது என்றும், பூக்களைப் பறித்த கலாதரனை புனுகு பூனையாகக் கடவது என்றும் சபித்தனர். அவர்கள் இருவரும் முனிவரைப் பணிந்து போற்றி தாம் செய்த குற்றத்தைப் பொறுக்கும்படி வேண்டி தங்கள் சாபம் தீரும்நாள் எப்போது என இரங்கிக் கேட்டனர்.

காணும் புழுதி, கழுதைப்புண் தீர்ப்பதுபோல்,
ஏனுழுயர் தீர இயற்கை துணைவருமே.

அதற்கு அவர் "நீங்கள் திருவண்ணுமலையை பாண்டியநாட்டு இறைவன் காரணமாக வலம் வரவேண்டி வரும். அப்போது உங்கள் சாபம் தீரும்" என்று கூறி அமைந்தனர். சாபத்தின் பயனுக குதிரையும் புனுகுபூனையும் ஆயினர் இருவரும். பின்னர் ஒருநாள் பாண்டிநாட்டு அரசனுன வஜ்ராங்கதன் வேட்டைக்குக் குதிரையின் மேலேறிச் சென்றபோது தான் கண்ட புனுகு பூனையை துரத்திச செல்ல அது அண்ணுமலையை வலமாகச் சுற்றி விழுந்து உயிர் துறந்தது. பாண்டியன் ஏறிச்சென்ற குதிரையும் விழுந்து இறந்தது. இறந்த புனுகு பூனையும் குதிரையும் மலையை வலம்வந்த காரணத்தால் திவ்யதேகம் பெற்று பழையபடி வித்யாதரர்கள் ஆயினர். அவர்கள் பாண்டியனை வந்தித்து 'நீங்கள் அருணுசலத்தைக் காலினுல் பிரதக்ஷிணம் செய்யாமல் குதிரையின்மீது ஏறிவந்த பாவம் இறைவனைப் பூசித்தால் நீங்கிவிடும்" என்று சொல்லிப் போயினர். அங்ஙனமே பாண்டியனும் அண்ணுமலைக்குத் திருப்பணிகள் பல செய்து மலை வலம்வந்த புண்ணியத்தால் இந்திரபதவி அடைந்தான்.]

6. *வஜ்ராங்கத பாண்டியன் திருவண்ணுமலையில் திருப்பணிகள் பல செய்து தவநிலையில் இருந்த புண்ணியத்தால் இறந்தபின் இந்திரப்தவியைப் பெற்ற தலம் அருணை மாநகரம்.

[*வஜ்ராங்கத பாண்டியன் முன் ஜென்மத்தில் தேவேந்திரனுக இருந்தவன். சிவபிரான் மீது வஜ்ராயுதத்தைப் பிரயோகித்த குற்றத்தால் மனிதனுய்ப் பிறக்கவேண்டி வந்தது.

" மன்னுமக பதிநீயெமை மதியாதொரு குலிசம்
அன்னுள்விட லுற்றுயத னுலேநரர் வடிவாய்
இன்னுதன பெற்றுயினி இமையோர்அதி பதியாய்ப்
பொன்னுடனே யென்றேவரம் பொழிந்தேயிறை
மறைந்தார்."

—அருணுசல புராணம் (வஜ்ராங்க. 47)

7. தேவி அருந்தவம் செய்து இறைவனுடைய இடப் பாகத்தைப் பெற்ற தொல்பதி அருணைமாநகரம்.

8. †மகப் பேறு இன்றி வருந்திய வல்லாள மகாராஜனுக்கு இறைவன் குழந்தையாய் வந்து லீலை புரிந்த தலம் அருணைமாநகரம்.

[† எதை வேண்டினாலும் அவரவர் வேண்டியபடியே தருவேன் என்று விரதம் பூண்டிருந்தான் வல்லாள மகாராஜன். இறைவன் சிவகணங்களுடன் ஜங்கம வேடம் பூண்டு திருவண்ணாமலைக்கு வந்து ஒவ்வொரு கணிகையரிடமும் ஒவ்வொரு ஜங்கமர் ஓர் இரவு முழுதும் இருக்க அக்கணிகையர் விரும்பிய ஆயிரம் பொன்னை ஈந்து, தான அரசனிடம் சென்று அன்றிரவு ஒரு தையல் தன்னிடம் போகம் அனுபவிக்கத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஊரிலிருந்த கணிகையர் யாவரும் தாம் கோரியபடி ஆயிரம் பொன் பெற்றிருந்த காரணத்தால் அரசன் அழைப்புக்குத் தாம் வர இயலாமையைத் தெரிவித்தார்கள். அரசன் தம்மிடம் வந்த ஜங்கம ஸ்ரேஷ்டரை எவ்வாறு திருபதி செய்வது என விளக்கமுருது கலங்கிய போது அவனுடைய இல்லாள் சல்லமாதேவி என்பவள், " அரசே! வருந்தற்க. என்னை அந்த சங்கமற்கு ஈந்து நீங்கள் மேற்கொண்ட விரதம் தவருது சிறப்புறச் செய்யுங்கள் " என்று கூறினுள். அரசனும் மகிழ்ந்து அதற்கு உடன்பட்டான். சயன அறையில் யோக நித்திரையில் இருந்த ஜங்கமரை எழுப்ப சல்லமாதேவி வீணை முதலிய இசைக்கருவிகளை வாசித்தாள். அதற்கெல்லாம் எழுந்திராத ஜங்கமரை அணைத்து எழுப்ப சல்லமாதேவி முயன்ற போது ஜங்கமராய் வந்த இறைவர் பச்சிளங் குழந்தையாய் அழுதனர். குழந்தையின் அழுகை யொலியைக் கேட்ட அரசன விரைவில் அங்கு

இளமைப் பழக்கம், இறுதிவரை மாறு;
வளமாரும் தூய வழிநில்நீ என்மனமே !

வந்து அந்தக் குழவியை களிப்புடன் எடுத்து அணைத்து உச்சி மோந்து மகிழும் தருணத்தில் அந்தக் குழந்தை திடீரென்று மறைந்து விட்டது. அரசனும் சல்லமாதேவியும் மிக வியப் புற்று, " வேதநாயகனே ! சுதன் எனத் தோன்றி மறைந்தீர். எங்கட்கு என்ன கட்டளை யிடுகின்றீர்" என்று கூறி ஆற் றொணாத் துன்பத்தை யடைந்து உளம் மெலிந்தனர். "கோ" எனக் கதறினர். அப்போது இறைவன் விடைமீது தேவியுடன் அரசனுக்குக் காட்சி யளித்தனர். இங்ஙனம் ஒரு குழந்தை வேண்டுமென்று இரங்கின அரசனுக்கு இறைவன், " அரசே! உமக்குப் பிள்ளை யாமே ஆனோம். ஆதலால் உமது அந்திய காலத்தில் செய்யவேண்டிய சடங்குகளை யாமே செய்து முடிப் போம் " என வரம் தந்து மறைந்தனர்.

" ஆதியே சரணம், மண்மேல் அடியரைக் காக்க வல்ல
சோதியே சரணம், கங்கைத் தூயசெஞ் சடையில் துன்னப்
பாதிமா மதிஅ ணிந்த பரமனே! தமியேற் குற்ற
நீதியைத் தாங்க ஓர்சேய் நின்மலா! அருளுவாயே "

" சுந்தர மன்னே கேண்மோ சுதனுமக் கியாமே ஆனோம்
அந்தத்தில் காம்உ னக்கே அறைவிதி முடிப்போம் என்று
சந்திரசே கரனார் வாழ்த்திச் சார்ந்தனர் கயிலை; பின்னர்
பந்தமாய் உலகை வேந்தன் பண்புடன் ஆண்டு
வாழ்ந்தான்."

—அருணசல புராணம் (வல்லாள. 60, 61) (தொடரும்)

தான்தின் கின்றநஞ்சு தன்னையே கொல்வதுபோல்,
வான்மறந்து செய்பாவம், வாழ்நாளைத் தீய்க்குமரோ.

இணையும் பெருந்திரு (2)

[ரஸபதி]

" அதுமதி, இதுஎன்(று) அலைந்தலைநூல் கற்(று,)
அழைப்பொழிந்(து,) அருமறை அறிந்து,
பிதுமதி வழிநின்(று,) ஒழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்,
செதுமதிச் சமணும் தேரரும் தேராச்
செல்வச் சிற்றம்பலக் கூத்தா !
மதுமதி வெள்ளத் திருவயிற்(று) உந்தி
வளைப்புண்(டு) என் உள் மகிழ்ந்தனவே !"

[*இதை - இதை (அறிவு). அலந்தலை - (மனம்) அலைவதற்கு ஏதுவான. அழைப்பு ஒழிந்து -பிதற்றலை விட்டு. பிதுமதி - பேரறிவு. பெரியர் - அந்தணர். செதுமதி - அற்ப அறிவுடைய. சமணும் - சமணர்களும். தேரரும் - பௌத்தர்களும். தேரா - தெளிதற்கு அரிய. மதுமதி வெள்ளம் - தேன் போலும் அறிவுப் பெருக்கம். உந்தி - (கொப்பூழ் -எனும்) தொப்புள் (சுழியில்.) வளைப்புண்டு - சுழித்து.*]

மகிமை நிறைந்தது மந்திர மறை. அதை, ஆர்வம் பெருகி ஓதுபவர் அந்தணர். சாலபுடை அவர்கள் சாந்தி மயர்; நிறைந்த அந்நெறியில் நின்று, நித்திய வேள்விகளை நிகழ்த்து கின்றனர். ப்ரஹ்மம் எனபது பெரிய பொருள; அதை உணரும் அவர்கள், பெரியார் எனும் பெயர்க்கு உரியர்.

அவர்கள் நெறியை மோந்தும் பாரா ஒரு சிலர், ஏதோ ஏதோ பேசுவர். அவர்களை என்றும் மனத்தில் எண்ணிலம். அந்தணர் வழிபடும் இடத்தை அடைந்தேம். அவர்களது அறிவு நெறியில் ஆழ்ந்தேம். அம்பலக் கூத்தா ! உமது திருவயிற்றை, அதனில் இருந்த தொப்புளை, சுழித்

பொல்லாத் தினவைச சொரிந்தென்றும் போக்கல்போல்,
நல்லார்கள், ஞான நமைதவிர்க்க நாடுனரே.

திருக்கும் கொப்பூழ்ச் சுழியை, கண்ட மனம் களிக்கிறதே! வட்டமிட்டு அங்கேயே வாழ்கிறதே! அந்தமனம், இனித் திரும்புவது ஏது? எனகிருர் சித்தர் திருமாளிகைத் தேவர்.

அவர் சித்தத்தின் நிலையை, அதிகமாக இங்கு நம் மனம் அறிந்து கொள்ளுகிறது அல்லவா!

பாசம் எரித்தலில் பழுத்த மழு, திகழ வீசும் திருக்கரம், ஓயாது ஒலிக்கும் உடுக்கைப் பறை, அபயவரத திருக்கரம், பாம்புக் கங்கணம் ஆதியவுடைய நீலகண்ட நிமலா! அணுக்கர் பெரிதும் அகம்மகிழ நீர் ஆடும்போது, புன்னகை செய்யும் அழகிய வெண்ணிற முத்துப்போன்ற பற்கள்; அவைகளை யுடைய பவளம் போலும் சிவந்த திருவாய்; இவை இரண்டும் கலந்து பளபள ஒளியைப் பரப்புகின்றனவே. அடியேன் அறிவு முழுதும், அந்த ஒளியுள் ஐக்கியம் ஆகிறதே! என்னே அடியேன் பெறும் இனபம்!

"கனிஎரி, விசிறு கரம்,துடி, விடவாய்க்
கங்கணம், செங்கைமற்(று) அபயம்,
பிணிகெட இவைகண்(டு,) அரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்(து) என் அமுதே!
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த!
அணிமணி முறுவல், பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்(று) என் அறிவே!"

[*கனிஎரி-மழு. விசிறு கரம் - வீசிய திருக்கரம். துடி - உடுக்கை. விடவாய் - பாம்பு; ஆகுபெயர். அபய செங்கை - அபய வரதகரம். பிணி - (பிறவி)நோய். பிரிவிலார் - தில்லை யந்தணர். திணி - திணிந்த. மணி - கருமணி போன்ற. அணி மணி - அழகிய முத்தைப் போலும். முறுவல் - பற்கள்.*]

துன்பிற் கிடங்கொடாத் தூயோர்கள், மெய்ப்பொருளின் இன்பில் இணைய் இருந்தேத்து கின்ருரே.

தந்தையில் இருந்தாய். தாயுள் புகுந்தாய். இருவர் அறியாமையும் இணைந்து பிறந்தாய். தொல்லை வாழ்க்கையில் துவண்டது போதும். இனி உன் பிறவியின் வேரைப் பெயர்த்து எறிகிறேன் என்று, உமது செவிகளில் இருக்கும் இரு குழைகளும், பேசாதே இனிது பேசுகின்றன. அவைகளுடன், களங்கம் அற்ற உமது கமலமுகமும், அதே செயலில் ஆர்வம் காட்டுகின்றன. எனது கருதது, அக்குறிப்பைக் கணித்தது; அவைகளில் கலந்து ஐக்கியம் கண்டது.

" கருவடி குழைக்காது, அமலச்செங் கமல
மலர்முகம் கலந்தது என்கருத்தே !

[கருவடி - பிறவியை நீக்கும்.]

கைம்மாறு கருதாது உதவும் கற்பகமே! வில்போலும் புருவ விமலா! முக்கண் கொண்ட முதல்வா! ஆயிர நாமத்தால் அந்தணர் அர்ச்சிக்கும் தில்லையில், கொக்கிறகும் கொனறையும் கொண்டவனே! அம்பல வாணா! கங்கை தங்கிப் பொங்கிய சடையில் படகென உலவும் இளம் பிறையும், மாபெரும் ஊமத்த மலர்களும் உள. புண்ணியப் பொலிவுடைய அலைகள், நிறைவு தோன்ற என்னெஞ்சில் புகுந்து நிலைத்தன. பயனுன ஒளியை அங்குப பரப்புகின்றன. இனி நான் என்பது இல்லை. எல்லாம் தானான தன்மயந்தான்.

" நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
நிகழ்ந்த என் சிந்தையுள் நிறைந்தே "

[புதுமத்தம் - புதிய ஊமத்த மலர்.]

பேய்போல் அலையும் பேதை மனம். வீணான அதன் செயலை மேலோர் விரட்டினர். அதன்பின் தூய தவத்தால் தொண்டர் ஆயினர். அவர்கட்குத் தொண்டன் அடியேன்.

முந்துவினை துன்பமா மோத, முடங்குவம்யாம்;
பிந்திவரும் இன்பம், பெருமான் அருள்வதுவே.

என்ன வியப்பு! கட்டுக்கு அடங்காத காமனையும், காலை தட்ட வருகிற காலனையும், சிவநிந்தை செய்த தட்சனுக்கு இனமான எசச தத்தனையும், கடைக்கண்ணால் அழித்து உலகைக் காத்த சிற்றம்பலச் செல்வமே!

உமது பொருளார் சீலம் புரிந்து கொள்ளாமல், எதை-எதையோ உளறினேன். இவ்வளவு திமிரா உனக்கு? இவ்வளவு எளிதாக, பாதாதி கேசங்களில் படரும் உணர்வொடு பாடுகினருயா என்று, சிறந்த உமது சிவகணங்கள் சீறுமோ என்று சிநதை அஞ்சுகிறதே!

அவர்கள், உமது நிமல மலர் அடியின்கீழ் நிறைவு கொண்டவர்கள். என் சொற்கள் அற்பம் ஆனவை. இதை ஒருபொருளாக எண்ணார்கள்; புல்லிய சொற்கள் ஆனாலும், பெருமானைப் போற்றுகினருன என்று பொறுத்துக் கொள்வர் எனறே என்மனம் மீட்டும் எண்ணுகின்றது; அதன் வழி அமைதி அடைகிறது.

"பூமலர் அடிக்கீழ்ப் புரான பூதங்கள்
பொறுப்பர் என் புன்சொலின் பொருளே"

[புராணம் - பலழமை;]

இப்படியே எண்ணியும் ஏத்தியும் இருந்த தேவர் உளத்தில், திடீரெனறு பெண்மை உணர்வு பிறநதது. அம்பலவர் என காதலர்; நான் அவர் காதலி எனறு, பித்துக் கொண்ட மனநிலையில் பேசசுக்கள் பிறக்கினறன. அறிவு எனும் செவிலித்தாய், அதை அறிகிருள; பாவம் அலறுகிருள்.

"உறவாகிய யோகமும் போகமுமாய்,
உயிராளி என்னும் என்பொன்; ஒருநாள்
சிறவாதவர் புரம்செற்ற கொற்றச்
சிலைகொண்டு, பன்றிப்பின் சென்றுநின்ற

ஆதி அருளில அரைககணம ஒனறிடினும்,
பாதி வியாதி பறந்தோடிப் போகாதோ?

மறவா என்னும்; மணிநீர் அருவி
மகேந்திர மாமலைமேல் உறையும்
குறவா என்னும்; குணக்குன்றே என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே!"

[என்பொன் - நான் பெற்ற மகள். மறவா - உக்கிர வீரா! குலாத் தில்லை - தில்லையில் குலவும்.]

உடம்பை ஆள்கிறது உயிர். அவ்வுயிர் சிவத்தில் ஒன்றல் சிவயோகம். அவ்வமயம், புனித உயிரைச சிவம் புணர்கிறது. இது, அநாதி சையோகம் என்று அறியப் பெறும். உயிரை ஆளும் காரணத்தால், உயிராளி என்று அம்பலவர் உணரப பெறுபவர்.

விஜயனைக் கொல்ல விரைந்தது பனறி. மூகன் எனும் அப்பனறியைத் தடுக்க, அதன் வேகத்தினும் விரைநத அத்தர், மறவர் என்று மதிக்கப் பெறுபவர்.

வித்தக ஆகமங்களை வெளிப்படுத்தும் காலத்தில். மகேந்திர மலையின அருட்குரவர் என்று ஆகின்றார். குறிப புணர்வார்க்கு, குணக்குன்றான குரவர்; மற்றவர்க்கோ அவர் மலைக் குறவர். சபாஷ்.

உயிராளீ! மறவா! குறவா! குணக்குன்றே என்று, நான் பெற்ற செல்வி, அதிநுட்பக் கருத்தமைய, அம்பலத்து ஆடுவானை அழைக்கின்றாளே! அவ்வளவுதானா!

" வினையேன் மடந்தை, விம்மா வெருவும்;
சேடா என்னும்; செல்வர் மூவாயிரவர்
செழுஞ்சோதி அந்தணர், செங்கை தொழும்
கோடா என்னும்"

[சேடன் - எருசி விருப்பவன். கோடா - பிழைபடாதவனே!]

பாவியேன் பெற்ற பாவை, என்னதான் எண்ணுகிறாளோ தெரியவில்லையே! விம்முகிறாள். அஞ்சித் திடீரென்று அலறு

ஆங்காரம் தீாநது அடங்கி ஒடுங்கி மனம்
தூங்கார்கட் கென்றும் சுகமில்லை நிச்சயமே.

கிருள். எல்லாம் அழிந்த காலத்தும் இருப்பவனே! எனும் பொருளில், சேடா! சேடா என்கிருள்.

அருட்செல்வர் மூவாயிரம் அந்தணர். சென்று தேய்ந்து இறுதல் இன்றிய மேதகு தவஒளி மேனியரான அவர்கள். தூய தம் ஆருயிரம் கைகளால் தொழுகின்ருர். இனிய அவர்கள் வழிபாட்டை ஏற்கும் நீ, நிறைவில் என்றும் குறை யாத நிமலர் எனும் பொருளில், கோடா! கோடா!! எனறு கூவுகின்ருளே!

மகேந்திர மலையில் அம்பலவர், தித்திக்கும் ஆகமத் தேனுயிருபபர்; அவரை உணர்ந்து, ஓயாது மந்திரம் ஓதும் வாய்மையர், திருவாளர்கள் என்னும் தெளிவு பெற்றுளர். அவர்கட்கு அம்பலவரே அதிபர்.

மகேந்திர மலைத் தேனே என்னும்: திருவாளர்
மூவராயிரவர் தெய்வக் கோனே என்னும'' என் மகள்.

தேன் என்றும் கோன் என்றும் தெளிந்து கூறியவள், மலையில் இருந்த மருந்தே! நெறியே! நெறிநின்றவர்கள் நினைக் கின்ற குறியே! என்று, திடீரென்று கூவுகின்ருளே!

மாயா மயக்கம் தவிர்க்கும் மருந்தானுன். (மந்திரம், பதம், வன்னம், கலை, புவனம், தத்துவம் எனும்) ஆறு வழிகளில் ஆகின்ருன்; வழிமுறை யறிந்தார் எண்ணும் இலட்சியப் பொரு ளாய் வாழ்கினருன் என்னும் புனித நுடபம், அவள் புலம்ப லில் புலனுகிறதே!

மேயச் செல்லும் காளைகள், தினமும் மாலையில் வீட்டிற் குத் திரும்பும். அவைகளின் கழுத்தணி மணிகள் கலகலக்கும். அடுத்துத் தென்றல் வரும். துணை பிரிந்த அன்றில்பறவை களின் துயர்க் குரல்கள் கேட்கும். இரவும் மதியும் இணைந்து வரும். கடலொலியும் குழலிசையும் கலந்து ஒலிக்கும். இக் காலங்களில், தலைவர் வருகை நோக்கித் தையலர் தவிப்பர்.

இறைவன் திருவுளம் ஏற்கஎன ஏத்தில்,
இறவாப் பிறவா இன்பநிலை எய்துமமே.

ஒருத்தி நான். இவைகள் அனைத்தும் எனக்குப் பகை. அட பாவமே! அம்பலவர் என் தாபத்தை அறிந்திலரா? அறிந்திருந்தால், இன்னும் தாமதித்து இருப்பாரா? கருடனுக்கும் கருடா! இமையவர் குழுவில் இளங் கொழுந்தே! வாராய்; வாராய் என்று, குரல் கொடுக்கின்றாளே என் கோமகள்.

"மகேந்திர நாதா! நாதாந்தத்து அரையா என்பார்க்கு,
நாதாந்தப் பதம் கொடுப்பாய்!"

[அரையா - அரசே!]

என் விஷயத்தில் மட்டும் உனக்கு இரக்கம் பிறந்திலதே! அது ஏன் ஐயா? என்று ஏங்கும் அவள் குரல், என்னால் சகிக்க முடியவில்லையே!

நெற்றியில மூனறு ரேகை நீறு விளங்க, வீட்டுக்கு அடங்காமல் வீதிக்குச் செல்கிறாள். மக்கள் பெருகி நடமாடும் பெருந் தெருவில், "திருநீறிடா உருத் தீண்டேன்!" என்று, பெருங் குரல் கொடுத்துப பேசுகின்றாளே! அதுதான்! "பெரு நீல கண்டன் பெரும்புகழை," இவள் எத்தனையோ வகையாக இயம்புகின்றாள்! மாதேவர், மலைமகள் கணவர் என்பர் பிறர்.

மனைவியாம்; கணவனும். மட்டரகமாக மனிதமதி, இப்படி எல்லாம் மதிக்கிறது. அம்பலத்து அரசே! "மலைமகட்கு அருளும் குருநீ!" என்று கூவுகின்றாளே என் குலமகள்.

நானா உம்மை நாடினேன்? நீர்தானே என்னைத் தேடி வந்தீர்! உம்மைக் கண்ட பின், உடம்பை மறந்தேன்; உலகைத் துறந்தேன். உத்தம ஐந்தெழுத்தை ஓயாது ஓதினன். அறியாமை இருள் அகல, புனித நீற்றையே பூசினேன். ஊனன்றி உம்மை உணர்வது உத்தமம். அப்படிச் செய்யாதவரையும் அருவறுக்க மாட்டீர். அவர்கள் மனத்திலும்

**தேகம் அநித்தியம் என்றறிந்த அப்போதே,
ஏகன் இணையடியை எண்ணுபவர் மேலோரே.**

அமர்ந்துளீர் ! உமது அருளை என் என்பன் ஏழை என்று,
பேதை அவள் போக்கில் பேசிக் கொண்டே இருக்கின்றளே!

வேருக உள்ளத்(து) உவகை விளைத்(து,)
அவனிச் சிவலோக வேத வென்றி
மாருத மூவா யிரவரையும், எனையும்
மகிழ்ந்தாள வல்லா யென்னும் ;
ஆறுஆர் சிகர மகேந்திரத்(து,)உன்
அடியார் பிழைபொறுப்பாய்! மா(து)ஓர்
கூறு என்னும், குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

[உவகை - பேரின்பம். அவனி - நிலவுலகம். ஆறு ஆர் சிகரம் - அருவிகள் நிறைந்த உச்சி.]

விததகப் பேரின்பத்தை, உள்ளத்தின் விளைவாக்கினள். மன இருள் அப்போதே மாய்ந்தது. பூலோகம் அவளுக்குச் சிவலோகமாகப் புரிகிறது.

மாமறைப் பயில்வில் வெற்றி மாருதவர், தில்லை மூவாயிரர். அவர்களுடன் எளிய என்னையும் பொருளாக்கி, மகிழ்ந்து ஆட்கொள்ளும் வல்லாளா ! ஊற்றெடுக்கும் அருவி களையுடைய மகேந்திர மலை உச்சியில் அமர்ந்து, புனித அடியவர் புரியும் தவறுகளைப் பொறுப்பவனே! வாமத்தில் தேவியை வைத்தவனே! என்று அலறும் மகள் செய்தியை, அறிவென்னும் தாய் அறிந்து நமக்கு அறிவிக்கும் அருமையே அருமை. சித்தர் திருமாளிகைத் தேவர், தம் ஆன்மானுபவத்தை, திருவிசைப்பாவில் பயனுன நடையில் இப்படிப் பாடுகிருர். இவர் போகர் மாணவருள் ஒருவர் என்று முன் அறிந்துளம். அடுத்த மாணவரான கருவூராரை, அடுத்த இதழில் சந்திப்பம்.

வாழ்க சித்தர்கள் வழிமுறை !

ஓம்

தேகசுத்தி செய்தபின், தெய்வபக்தி பண்ணுகின்ற
தாகமுளர் வாழ்வில், தனியின்பம் காணுமரோ.

எப்பொருள் ?

[கி. வா. ஜ.]

அருணகிரி நாதருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஞானமே உருவாகிய பரமசிவனுக்கு உபதேசம் செய்தானே! இது மிகவும் விசித்திரமான விளையாடலாக இருக்கிறதே! மகன் தகப்பனுக்குச் சொல்லும் உபதேசம் எதுவாக இருக்கும்? பிரணவத்தின் பொருளை உபதேசித்தான் என்று பொதுவாகப் புராணம் கூறினலும் அதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும். அது என்ன ? இப்படி அவர் சிந்தனை ஓடியது. இந்த உண்மையை யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது? குமரனுக்கும் அரனுக்குமே தெரிந்த பரம ரகசியம் அது. அவ்விருவர்களில் யாரேனும் ஒருவரிடமே தெரிந்து கொள்ள வேண்டும். இருவரில் நமக்கு அருள்செய்த குமரநாயகன் நமக்கு எளியனாக இருக்கிறவன். அவனையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.— இப்படி ஓர் எண்ணம் தோன்றியது. ' எம்பெருமானே, சிவபெருமான் உன்னை வணங்கிக் கேட்க உபதேசம் செய்தாயே! அது என்ன ?' என்று நேரே கேட்டுவிடலாம் என்று துணிந்தார்.

முருகன் தகப்பன் சாமியாக இருந்து உபதேசம் செய்த அந்தக் காட்சியை நினைவுக்குக் கொண்டு வந்தார். முருகன் வீற்றிருக்கிறன். எதிரே சிவபெருமான் பணிவுடன் நின்று கொண்டிருக்கிறன். அவன் வாய் மெல்ல ஏதோ சொல்கிறது. விண்ணப்பம் ஒன்றைச் சொல்கிறன் சிவபெருமான். முருகனுடைய ஆறெழுத்து மந்திரத்தைச சொல்லி வணங்குகிறன். அவ்வாறு வணங்கி, " எனக்கு உபதேசம் செய்தருள வேண்டும் என்று பணிவுடன் சொல்கிறன்.

காக்கின்ற மூலிகையைக் கண்கண்டும், ஏமாறும்
ஆக்கத்தார் தங்களை, ஆர்காக்க வல்லாரே?

நாதா, குமரா நமஎன்று அரனர்
ஓதாய் எனஓ தியதுஎப் பொருள்தான்?

முதலில், "என் தலைவனே!" என்று விளித்தான். அடுத்தபடி ஷடக்ஷரத்தை உச்சரித்தான். முருகனுக்குரிய ஆறெழுத்தாக இன்று பெருக வழங்குவது சரவணபவ என்பது. இதையன்றி வேறு ஆறெழுத்து உண்டு. நமஃ குமாராய என்பது அது. நச்சினார்க்கினியர் என்ற பழைய உரையாசிரியர், அந்த மந்திரத்தைத் திருமுருகாற்றுப்படை உரையில் சொல்கிறார். நமச்சப்தத்தை முதலிற் கொண்டது ஸ்தூலம் என்றும், அதனைப்'பின்னாலே கொண்டது சூக்ஷ்மம் அல்லது ஞானமென்றும் சொல்வர். சிவாய நமஃ என்பது ஞானபஞ்சாட்சரம் என்பர்கள். அது போலவே நமக்குமராய என்பது ஸ்தூல ஷடட்சரமென்றும், குமாராய நமஃ என்பது ஞான ஷடட்சரமென்றும் கொள்ளலாம். ஞானோபதேசம் பெறநின்ற சிவபெருமான் ஞான ஷடட்சரத்தை உசசரிப்பது பொருத்தமேயன்றோ?

இவ்வாறு முருகனை விளித்து, "உபதேசத்தை உரைக்க வேண்டுமென்று அரன் கேட்டானும். அவனுடைய விண்ணப்பத்துக்குச் செவிசாய்த்து முருகன உபதேசம் செய்தருளினன். "அப்போது ஓதியது எந்தப் பொருளை?" என்று கேட்கிறார் அருணகிரியார்.

ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்?

எல்லாவற்றையும் சங்காரம் செய்து மற்றவற்றையெல்லாம் இல்லாதனவாக்கித் தனியே பிரளயகாலத்தில் நிற்பவன் சிவன்; ஹரன. அந்த அரனாரே பணிந்து வணஙகி, "அப்பா, உபதேசம் செய்" என்றால் அது எத்தனை உயர்ந்த உபதேசமாக இருக்க வேண்டும்! 'நாம் எல்லாம் சும்மா இருக்க, எல்லோ

பாழும்தேள் கொட்டிடய பாம்புமாநதரம போடுநர்போல்,
ஊழறிய ஓரார், உயங்குமதி யாளர்களே.

ருக்கும் உபதேசம் செய்யும் இந்தப் பெரியவர் இவனை அணுகி உபதேசம் பெற்றுக்கொண்டு போய்விட்டாரே! ஏதோ ஒன்று இவனிடம் இருப்பதனுல்தானே அவர் அவ்வளவு பணிந்து கேட்டார்? அதை இவ்வளவு அணுகி அன்பு செய்யும் நாம் பெருமல் சோரவிட்டுவிடுவதா?' என்ற எண்ணம் உண்டா யிற்று. அதனுல், " எம்பெருமானே, அந்த இரகசிய உப தேசத்தை எனக்கும் உரைத்தருளக் கூடாதா? கருணை கூர்ந்து அது இன்னதென்று சொல், அப்பா " என்று கேட்கிருர்.

நாதா, குமரா நமஎன் றரனுர்
ஓதாய் எனஓ தியதெப் பொருள்தான்?

திருப்புகழ்

(புலவர் வித்வான் ஐ. நடேசன்)

புகழ் என்பது பாராட்டு என்னும் பொருளது. பாராட்டு, சிறப்பித்தல், மேம்படுத்திக் கூறல், கொண்டாடுதல் என்பன ஒரு பொருளன. இதைக் கீர்த்தி என வடமொழி குறிக்கும். தமிழில் சீர்த்தி என ஒரு சொல் உண்டு. (சீர்த்தி - மிகுபுகழ்.) மக்கள், தம் நல்லறிவாலும் நல்லொழுக்கங்களாலும் அடை வது புகழ். பேரறிஞர்களும் ஞானிகளும் தெய்வத தனமை யுடையவர்களும் தங்கள் தகுதியால் அடைவது மிகுபுகழ். புகழும் ஒரு காலத்தில் மறையக் கூடும். மிகு புகழும் கால மாறுபாட்டால நெடுங்காலங் கடந்து மறையக் கூடும். ஆனுல் திருப்புகழ் என்பது எனறும் அழியாப் புகழாகும். எனவே மக்கள் பெறுவது புகழ். பெருமக்கள் கொள்வது மிகுபுகழ். தோற்றமும் ஈறுமில்லாத ஆண்டவனுடையது திருபபுகழ் = (அழியாப்புகழ்.)

ஓட்டுகின்ற நோய்க்கு ஒதுங்கிச்செல் கின்ருர்போல்,
கட்டவரும் தீவினையைக் கண்டஞ்சி நீங்குவமே.

தோற்றமும் மாற்றமும் ஈறுமில்லாப பெம்மான சிவபெரு மான். அத்தேவ தேவன, அயன, மால், தேவேந்திரன் தேவர், முனிவர் ஆகியவர்களின் நன்மையின் பொருட்டு, வாழ்வின் பொருட்டுத் தன் தொல்லை முகங்களின் ஆறின் நெற்றிக் கண்களில் இருந்து ஆறு புலிங்கங் (நெருப்புப் பொறி) களைத் தந்து விளையாட்டாகக் குழந்தைகளாக்கிக் காட்டி ஆறுருவமும் ஒருருவப படுத்தி ஆறுமுகன் என்னும் அமலனைத் தந்தான. அங்ஙனம் தந்தருளியதன் காரணம் சூரனுடைய கொடுமை தாஙகமாட்டாத தேவர்களுடைய வேண்டுதலுக்கு இரங்கியே யாகும்.

முன்னரே பலமுறை குறை இரந்த அயன் முதலியோர்க் குப் பரமன் வாககுத் தந்தபடி ஒரு மைநதனைத் தந்து தங்களைப் புரத்தல் வேண்டுமெனப் பின்னரும் கைலையம் பதியிடம் அனற்பிழம்பாகத் தோன்றி அருள் வடிவாக மாறிய ஆறுமுகப் பெருமான் தோன்ற வேண்டுமென அயன முதலியோர் பரமனை வேண்டினர். எப்படி ?

''ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துனபு மினறி
வேதமும் கடந்து நினற விமல, ஓர்குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார் ''
(கநத. திருஅவ. 42)

எனவே,

''அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நினற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகஙகள் ஆறும் கரஙகள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன வந்து ஆங்கு உதித்தனன உலகமுய்ய''
(கந்த. திருஅவ. 92)

எதிர்க்கினற தீங்கினைக் கிள்ளிஎறி யாமல்,
அதிர்க்க வளர்ந்தபினர், ஆரழிக்க வல்லுனரே.

(திருமுருகன் வந்து உதித்தனன் = அழகிய குழந்தையாக வந்து தோன்றினன்.)

இதனை சூரபன்மனுக்குத் தம்பியாகிய சிங்கமுகாசுரன் கூறுகிறன்—

''அருவும் ஆகுவன் உருவமும் ஆகுவன்; அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன; ஊழின்
கரும மாகுவன்; நிமித்தமும் ஆகுவன் கண்டாய்;
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திட வல்லார்'' என்று.

(கந்த. மகேந். சூரனமைச். 126)

ஆதலால் அறுமுகச் சிவம் பரசிவத்தின் மறு உருவம் என்பது தேற்றம். அன்றியும்,

சக்தியின் அருட்கூறும், சிவத்தின் திறற்கூறும் ஆக இரண்டும் திரண்டே கந்தப்பெருமான் வந்தருளினர்.

சக்தியல்லால் சிவமென்று தனித்து ஒன்றில்லை என்பதை வற்புறுத்துகின்றது ஆனந்தலகரி என்னும் புகழ்நூல்.

வாணிபம் புரிவோர் தொடக்கத்தில தாம் வைத்த முதலைக் காட்டிலும் நாளடைவில் பனமடங்கு லாபம் பெறுதலுண்டு என்பதை நாம் அறிவோம். அதுபோலச் சிவன்பால் தோன்றிய செவ்வேள் தம் தந்தையினும் ஆற்றலும் சிறப்பும் அடைதல இயல்பே அன்றே! அங்ஙனமாதலால் மொழிதற்கரியன வாகிய சிவபெருமானுடைய புகழ்களை எல்லாம் சிறபபித்துத் திருபபுகழ் எனக கூருமல் அவன தந்த குமாரக் கடவுளினது புகழைத் திருப்புகழ் எனபது பெருவழக்காயிற்று. இதனைக காட்டித் தந்தவர் நெடுஞான முனிவராகிய அருணகிரியாராவர்.

பின்னும் பகவானுடைய ஆறுகுணங்களுள் ஒனருகிய ஞானமும், எணகுணஙகளுள் ஒன்ருகிய இயற்கை உணர்வு முடைய பரசிவத்தினிடம் தோன்றிய அறுமுகச்சிவம் '' மகனறிவு தநதையறிவு '' என்னும் முதுமொழியையும்

பாய்விரித்துச சோம்பிப படுக்காமல், ஊக்கமுடன்
தாய்மைச் செயலைத் தழுவுவது தக்கதுவே.

விஞ்சிப் பிரணவத்தின் பொருளை அறிவானந்த சொரூபமா யுள்ள அத் தந்தையாகிய சிவபெருமானுக்கு உபதேசிக்கும் தகுதி பெற்றார். ஆகவேதான் 1. ஞானவேலன், 2. ஞான பண்டிதன், 3, ஞானகுரு என்னும் புகழ்பெற்றார். அப்புகழ் திருப்புகழே அல்லவா !

தந்தை என்பது மாத்திரமன்றி அறிவே உருகிய கைலைப் பதியாகிய தக்ஷிணா மூர்த்திக்கு (தக்ஷிணா - அறிவு, மூர்த்தி - வடிவு.) ஓம் பொருளை உபதேசித்துக் 4. குருநாதன் என்றும், 5. *குருபரன் (பரனுக்கும் குரு) என்னும் புகழ்பெற்ற முருகனது* புகழ் திருப்புகழே அன்றோ !

தேவர்கள் சூரனது கொடுமைக்கு உட்பட்டுத் தத்தளித் தனர். ஏன் ! இந்திரனும் இந்திரையும் விண்ணுலகம் விட்டு மண்ணுலக மடைந்து மறைந்துறைந்தனர். அவர்கள் மகன் சயந்தன் சூரனுடைய மகேந்திரபுரியில் சிறைபட்டு அல்லலுற் றான். இவ்வளவையும் தவிர்த்தான் முருகன். தேவர் படைக் குத் தனித் தலைவனாகிப் படையைச் செலுத்தி வெற்றி பெற்று 6. தேவசேனாதிபதி என்றும் புகழ் பெற்றான். இது திருப்புகழ் அல்லவா !

அளந்தறிதற்கரிய பெருங்கருணை யுடையவன் கந்தன். ஆதலால் அளக்கலாகா மலை, கடல், மேகம் எனனும் பொருள் களாக உருவகப் படுத்தப்பட்டு 7. கருணைமேகம், 8. கருணை மேரு, 9. கருணைவாரி எனப் புகழப்படுகிறான். (திருப்புகழ், வாரியார் தொகுப்பு 223) அருணகிரிநாதர் அருள்வாக்கால் பாராட்டப்பட்ட இவை திருப்புகழ்களன்று என மறுக்கப் படுமோ !

இதுவரையில் கூறியவற்றால் நாம் அறிவதென்ன ! சோம சுந்தரப் (சஹ + உமா + சுந்தரன்) பெருமானாகிய பரசிவத்தின்

நாமமறி யாதஉயிர், நாரையறி யாதகுளம்,
காமமறி யாதமனம், கண்டவர்கள் யாரேயோ ?

மைந்தன் கந்தப்பெருமானுடைய புகழே திருப்புகழ்; மற்றைப் புகழனைத்தும் அங்ஙன மாகமாட்டா என்பது அறிகின்றோம். இதுபற்றியே

"எல்லாரும் ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்எல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கான மயில்வீரன்
திருப்புகழைக் கேட்கும் செவி."

என்னும் சிறப்புப் பாயிரச செய்யுள் தோன்றிற்று.

சமரசம் 21

தமக்கழிவு தாமே தேடுவார்

(அன்பன்)

கோதாவரிக் கரையில், எடுப்பான ஒரு சிவாலயம் இருக்கிறது. மாசி மாதம். சிவராத்திரி புண்யகாலம். அன்று புலஸ்தியர் அங்கு வந்தார். புனித சந்நிதியுள் புகுந்தார். ஆலயக் கதவை அடைத்தார். சிறக்க அமர்ந்தார். சிவபூஜை செய்தார். நெடுநேரம் இந்த நிலை.

வழிபடும் ஆர்வத்துடன், வானர பக்தர்கள் நால்வர் வந்தனர். கதவு மூடி யிருந்தது கண்டனர். மூன்று ஜாமம் முடிந்தது. வரத நாரணர், அவ்வமயம் வந்தார். வானரர் கண்டனர். எழுந்தனர். திருமாலை வலம் வந்தனர். வணங்கினர். வாய்பொத்திக் கை குவித்தனர்.

அச்யுதா! புனித காலத்தில் சிவத்தைப் பூசிக்க வந்தோம். எவரோ ஒருவர் உள்ளே இருக்கிறார். கதவு திறப்பார் என்று, நெடுநேரமாகக் காத்து இருக்கிறோம். என்ன செய்வதென்று தெரியவில்லை என்று, கை முறித்து அயர்வுகொண்டு அறிவித்தனர்.

நரைதிரை மூப்பறியா நனஞானாக கஞ்சி,
கரம்சுவப்பும் தாலன்றன், காதைபல உண்டன்றே.

கண்கலங்கும் அவர்களைக் கண்ட கடல்வண்ணர், இரக்கம் கொண்டார். ஆத்திரப் பட்டவர்போல் கதவை யறைந்தார். திருக்கதவும் அவ்வளவில் திறந்து கொண்டது. உவகை கொண்ட வானர வீரர்கள், திமுதிமு என்று உள் புகுந்தனர்.

அந்த அதிர்ச்சியில், சிந்தனை சிதைந்தது. விழித்தார் புலத்தியர். காளைகளான வானரர்களைக் கண்டார். கனன்றது மனம்.

பொய்கையைக் குழப்பிய எருமைகள் போல், கேண்மை ஒருமையைக் கெடுத்தீர்கள். உங்களைப் போன்றவர்கள், இப் பூமிக்கே பாரம்; ஒழியுங்கள்! கூண்டோடு அழியுங்கள் என்று, கொதித்துச் சாபம் கொடுத்தார். பக்த வானரர்கள் மனம் படபடத்தது.

புலஸ்தியா! உத்தம வழிபாடு உனக்கே உரியதா? ஆலயக் கதவை அடைத்தது முதற்பிழை. ஐந்து ஜாமமும் முடிந்தால், நாங்கள் வழிபடுவது எங்ஙனம்? எம்மானை இறைஞ்ச வந்தோம். அட பாவமே! இதய ஒளி எழுப்பும் சிவராத்திரியில், ஆராதனை செய்யாமலா அடியோம் இறப்பது?

அநியாயமாக எங்களைச் சபித்த நீயும், இப்போதே இறந்து போ என்று, பக்த வானரர்கள், அழுதபடி சாபம் அளித்தனர். மாதவர் புலஸ்தியர், அப்போதே மரணம் ஆயினர். வானவர் நால்வரும் வீழ்ந்து இறந்தனர். அந்த ஐந்து உயிர்களும் புனித நுண்ணுடலில் புகுந்து, அவசரப்பட்ட தம் தவறுகளை எண்ணி அலறி விம்மி அழுதன. என்ன சங்கடமான செய்தி இது!

பக்தர்கள் செய்தியைப் பார்த்த பரந்தாமன் திருவுளம் இரங்கியது.

நச்சுக் கனிகளை நல்தருக்கள் நல்காவாம்;
இச்சையகல் ஞானிகள்சொல் யாவும்மறை யாகும்மே.

கதவைத் திறந்தேன். இவ்வளவும் இதன் விளைவுதான். அரக்கரை ஒரு காலத்தில் அழிக்க நினைத்தேன். அவர் கட்குப் பிருகு பத்தினி, அடைக்கலம் அளித்தாள். அது கண்ட எம் சக்கரம், அவள் தலையை அறுத்தது.

பிறகு வந்த பிருகு முனிவர், பிரியா உம் தேவியைப் பிரிந்து, எம்மைப் போல இடர் அடைக என்று, என்னை ஏறிட்டு நோக்காமலேயே சாபம் இட்டார்.

தவத்தர் வாக்கை நிறைவேற்றி வைப்பது என் தருமம். புலஸ்தியர் காலவழியில், தொல்லை அரக்கர் பலர் தோன்றியுளர்.

எம் துவாரக பாலகர் இருவர், இரண்ய இரண்யாட்சசராக வந்தனர். அசுர உடலில் இருந்து, பிரியா அவர்களைப் பிரித்தேன். இராவண கும்பகர்ணர்கள் என, அவர்கள் இப்போது அரக்கர் உடலம் எடுத்துளர். தானவர் தலைவருமாயுளர்.

புலஸ்தியரே! உமது சாபம் தீர, இனி இராவணன் உடலிற் புகுந்து இரும். பிருகு முனிவர் சாபத்தை நிறைவேற்ற, யாம் தசரத ராமனாக அவதரிப்பம். உம் சாபம் அப்போது ஒழியும்.

பரம வானர பக்தர்களே! சிறக்கத் திருப்பணி செய்யாத நீங்கள், எமது மற்றொரு மூர்த்தமான சிவவுருவை, வழிபடச் சிந்தித்ததே பிழை. அதனால் வந்த சாபம் இது. தேவ ரகஸ்யத்தை மற்றவரால் தெரிந்து கொள்ள முடியாது. உங்கள் மூலம், இதை உலகம் உணரும்.

சீதையை இராவணன் சிறை வைப்பன். முதலில் அவளை மீட்க முயல்வன். நீங்கள் நால்வரும், வாலி சுக்கிரீவ அங்கத அனுமர்களாய் தோன்றுங்கள். தூய தர்ம ரட்சணம் செய்ய முயலும் எமக்கு, துணை எனும் பெயரால், தன்னலமற்ற சிறந்த சேவையைச் செய்ம்மின்கள்!

மனசாட்சியைக்கொன்று மாய்வாரைக் கண்டு,
இனசாட்சி நல்லறிஞர் ஏங்குவதே இல்லையரோ.

திருமாலுக்கு அடிமை செய்! அதன்பின் சிவத்தைப் பேணல் தவத்திற்கு அழகு. தெரிகிறதா என்றார் திருமால்.

உடலைப் பிரிந்த அந்த உயிர்கள் ஐந்தும், அச்யுதர் அருளுரைகளை அறிந்து மகிழ்ந்தன.

முன் துவாரபாலகனா யிருந்த ஓர் உயிர், பண்டைய சாப விதிப்படி, இராவண உருவில் இராமனைப் பகைத்தது. புலஸ்தியர் ஆன்மா, அந்த இராவணன் உடலில் புகுந்தது! முன்னைய வாசனை முன் நிற்க, சிவசிவ என்றே சிந்தித்து இருந்தது. ஓர் உடலில் இரண்டு உயிர்; என்ன அதிசயமான செய்தி இது! சூரனும் பதுமனும் ஒரு உடலில் இருந்தனர் எனும் கந்தபுராணமும் இங்கு கருதத் தகும்.

அன்று அருளியபடி, அவதாரங்கள் தோன்றின. சீதை சிறை புகுந்தாள். மோது போர் மூண்டது.

"அரனதிகன், உலகளந்த அரியதிகன் என்று உரைக்கும்
அறிவிலார்க்குப் பரகதி இல்லை"

என்னும் அனுபவங்கள், பல இடங்களில் விளங்கின. இராம னுக்குச் சேவை செய்யும் அனுமான், சஞ்ஜீவி மலையை எடுத்து வரச் செல்லும் வழியில், கயிலை நாதனைக் கண்டு கை கூப்பி, கண்மழை சிந்திக் களிக்கின்றான்.

இராவண வதம் முடிந்தது. அவன் உடலில் இருந்த புலஸ்தியர் ஆன்மா, பெறுதற்கு அரிய கதியைப் பெற்றது. மைதிலியைச் சிறைமீட்ட மாதவன், சேது எனும் இடத்தைச் சேர்ந்தான்.

தன் வேறு ஒரு மூர்த்தமான இலிங்கத்தை வழிபடு முறையை மற்றவர் அறிய, புனித நடையில் அதைப் பூசித்தான். அதன்பின் அயோத்தி எய்திய அண்ணல், வரன்முறை வழுவாது தான்வழிபட்ட தனது வேறு ஒரு மூர்த்தமான

கொதிக்கும் நெருப்பும், குளிர்நீரும் போல,
விதிசெய் சதியின் விளைவறிய மாட்டோமே.

திருவரங்கரை, ஆராதனை செய் என்று விபீஷணர்க்கு அளித்தான். அருமையாக இருக்கிறது இந்த அனுபவங்கள்.

உடலை இயக்குகிறது உயிர். உயிர்களைத் தெய்வம் உணர்த்துகிறது. அருளைப் பெறுகிறது ஆன்மா.

அந்த அருள்முதல், அவரவர் விரும்பியவாறு சிவ உருவாகிச் சிறக்கும். திருமால் உருவாகித் திகழும். பிற மூர்த்தங்களாகிப் பிரகாசிக்கும். இதுதான் ஆஸ்திக உலக அறிவிப்பு.

அருமையான இவைகளை அறியாமல், திரிலோகங்களையும் திருமால் அளந்தார். அப்போது அவர் அடியில் சிவனுர் அகப்பட்டார். உலகை நாரணர் உண்டபோது, அவர் வயிற்றுள் அடங்கிய சிவனையா அருள்முதல் என்பது? என்று ஆரவாரிக்கிருர் ஒரு அறிஞர்.

வேதங்கள், வாசுதேவனைப் பிரகிருதி மாயன் என்றே பேசுகின்றன. கண்ணுதல் இறைவர், மறைகடந்த நாதர். திருமாலின் அடியிலும், ஒரு சாண் வயிற்றிலுமோ எங்கள் சிவனுர் அடங்குவர்? என்று, கொதித்து மற்ருெரு அறிஞர் கொக்கரிக்கிருர்.

முதலையின வாய்ப்பட்ட கஜேந்திரன், ஆதிமூலமே என அலறியபோது, அதைக் காக்க வந்தவர் கடனிற வண்ணர். எனவே அவரே பரவஸ்து; அவரே ஆதிமூலர்; சிவனுர் அல்லர் என்று அறிஞர் ஒருவர் சிரிக்கிருர்.

ஆதிமூலர் திருமாலாயின், அநாதிமூலர் சிவபெருமான. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது என்பதுபோல, இம்முதலைக் கதையையே முன்னே கொள்வதா? சாதாரணமான ஒருவனே முதலையைச் சாகடிக்கின்ருனே!

முதலையுண்டு இறந்த பிள்ளையை, அதுவும் சில ஆண்டு கழித்து, ஏரியில் நீரை வருவித்து, முதலையை உயிர்ப்பித்து, வளர்ந்த வயதொடு, மகவை அவிஞசிப் பதியில் எங்கள் சுந்தர

நூலுரைக்கும் நுட்பம் நுனித்தறியார், வாயாடும்
சீலத்தால் ஏய்ப்பின், சிரிக்கும் தருமமரோ:

மூர்த்திகள் வருவித்த அந்த அற்புதத்தில் இது எம்மாத்திரம்? என்று இடிக்குரல் எழுப்புகிறார் ஒரு அறிஞர்.

பரமபதத்தையும், சிவலோகத்தையும் நாள்தோறும் பார்த்துத் திரும்பும் பரம ஞானிகள் போல் இந்த அறிஞர்கள், மோதல் செய்யும் வாது முகத்தில், தம் தம் கன்ம மூட்டைகளைக் கட்டுகின்றனர்.

நியமம் வழுவாமல் நம்பனை வழிபட நேரம் போதவில்லையே என்று ஏங்கும் அன்பர்கள், இவர்கள் வாதத்தைக் கண்டு வருந்துகின்றனர். ஆஸ்திகக் குரலெழுப்பி நாஸ்திகம் வளர்க்கும் இவர்களிலிருந்து, கடவுள் பெருமான்தான நம்மைக் காப்பாற்ற வேண்டும்!

வாழ்க சமரசம்.

ஓம்.

REFLECTIONS ON THE DISASTER OF APRIL, 1964.

Collapse of a School building and the death of young Students.

" இன்றுகி நானையுமாய் மேலுமான
எந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றுகிக் கதறினர்க்குச் சேதாவாகிக
கடிதினில் வந்து அருள்கூறும் கருணை விண்ணே "—

என்றார் தாயுமானார்.

"The bleating calves of humanity raise their cries of despair to heaven, and the Lord is there at the immediate moment, as the heavenly mother cow, to protect and bless." Such assuring aphorisms from saints and sadhus and the sacred texts, have for ages helped mankind to keep alive God-love and spiritual belief in this land of trial and

tribulation whenever they had been challenged Bhakti-Sadhana and absorbing divine love alone in an atmosphere of complete self surrender, have been declared as the true unfailing keys to the gateways of the Lord's grace and eternal immortality and blessedness. Where the doors of death completely efface the recollection of possible misdeeds in prior births, poor man finds himself in despair either to understand or to console when heart-rending disasters as the recent Madura disaster of the 4th April challenges the foundations of human faith. Thirty eight children were done to death with cries of "Ayyo-Amma" in their lips in a moment. The world mother Sri Meenakshi was undoubtedly the 'Amma' of the City and the Universe from the beginnings of time. Beyond saying that the *Prarabda* of the children now lost, has landed us in this distressing situation, there is, so far, nothing more to say. Even when the Divinity takes human shape and form, and strides the earth as Avathar, He submits Himself to '*Prarabda.*' The attrocities of Ravana and miseries of Sita and Rama, the tribulations of Lord Krishna and the trials of a host of devotees in the past, indicate the infallibility of the great saying in the Gita, that an Act done is an act that could not be recalled, and the re-action as *Prarabda Karma* will come at the appropriate time, if not counteracted in the meantime. At such moments of great distress

and ignorance as to the why of it, the abiding faith in the Lord and prayer, are the only panacea for the living and the dead. As life is but a continuation until absorption into God-head, the mercy of the Mother Sri Meenakshi, which Sri Adi Sankara described as "Karunya-Varam Nidhim" (the ever lasting oceanic grace of 'Karuna' of Mother Sri Meenakshi), will await in thunderous showers of beneficence and blessing blessedness and everlasting joy on what now in our sorrow and ignorance seem to us to be an unfortunate victims of an accident The call of the children 'Ayyo Amma' for the Mother at the accident, can never fail, and this has to be one's only faith and consolation.

—*Thiruppugal Mani.*

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல பங்குனி முடிய வருடசநதா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14 அனுபபவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத தொகையை அனுப்பினுல் தொடர்நது பததிரிகை கிடைககும். வருட நடுவில் சநதாச் செலுத்திஞல், சித்திரைமீ முதல வந்த முன் இதழ்கள் கிடைக்கக கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக கொளளவம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முநதிய இதழ்களின் வருடத தொகுப்புகள பயிண்டு செய்தன 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1 வீதம் அனுப்பவும்.

நல்கா(து) ஒழியான் நமக்கென்றுன் நாமம்பிதற்றி, நயனநீர்
மல்கா, வாழ்த்தா, வாய்குழறு, வணங்கா, மனத்தால்
நினைந்துருகிப்,
பல்கால் உன்னைப் பாவித்துப், பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி, அருளாய் என்னை உடையானே!

Nº1506
ASOKA

Regd No M.530 Amirthavachani சித்திரை (1964 அமிர்தவசனி 16-1

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.

MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பிநாயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3.

டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி
ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 8, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street Madras-1
Edited & Published by S. Muthuswami 8, Bunder Street, Madras-1